# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.**

வெளி.22:12


THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

November - December 2023
Volume : 63

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue :6

## 14–வது ஆண்கள் ஐக்கிய மாநில முகாம், மதுரை















## Dedication of Cafeteria, Trinity Bible College










ஆசிரியரிடமிருந்து........!

## இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்களும் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுதலும்
## CHRIST OF COMING



கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்களுக்கு, வரப்போகும் ராஜாவாகிய இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

"இதோ சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி.22:7,12,20) என்று சொன்ன இயேசு வாசற்படியில் நிற்கிறார் (யாக்.5:9). அவர் தாமதம்பண்ணார் (எபி.10:37). "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று வேதம் கூறுகிறது (1 பேதுரு4:7). "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்: ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (மத்தேயு 24:44) என்று இயேசு முன்னுரைத்திருக்கிறார். மத்தேயு 24:7,8ம் வசனங்களில் வாசிப்பதுபோல இன்று நடைபெறும் சம்பவங்கள் கடைசி காலத்தின் அடையாளங்களாக இருக்கின்றன. இச்செய்தியிலே நாம் இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் என்ன என்பதைப் பற்றியும், அவருடைய வருகைக்கு நாம் எப்படி ஆயத்தப்படுவது என்பது பற்றியும் சற்று தியானிப்போம். வேதாகமம் முழுவதும் 1845 வசனங்கள் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி தெரிவிக்கின்றன. புதிய ஏற்பாட்டில் மட்டும் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி கூறும் 318 வசனங்கள் உள்ளன.

## இயேசுவின் வருகைக்கான அடையாளங்கள்
## SIGNS OF HIS COMING

வேதத்தின் அடிப்படையிலே இயேசுவின் வருகைக்கான அடையாளங்களை நாம் மூன்று இடங்களில் காணலாம். அவை சபை, உலகம் மற்றும் யூதர்கள்.

### I. சபைக்குள்ளாக காணப்படும் அடையாளங்கள்
### Ecclesiastical Signs

**1. கள்ளத்தீர்க்கதரிசிகள்**

இவர்களைக் குறித்து இயேசு மத்தேயு 24:24 வசனத்திலும், பவுல் 2 தீமோத்தேயு 4:4 வசனத்திலும் எச்சரிக்கின்றனர். இன்று அநேக துர் உபதேசங்களையும், வேத புரட்டுகளையும், பொய்யான அற்புதங் களையும், தரிசனங்களையும், தவறான வேத வியாக்கியானங்களையும் பேசி மக்களை குழப்புகிறவர்கள் பெருகிவிட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இத்தகையோருக்கு நாம் விலகி எச்சரிக்கையாய் இருப்போமாக.

**2. ஆவிக்குரிய வெதுவெதுப்பு**

இது ஒரு அனலும் இல்லாத குளிரும் இல்லாத நிலை. வெளிப்படுத்தின விசேஷம் 3:15-ல் பரிசுத்த ஆவியானவர் இந்த நிலையைக் குறித்து கண்டித்து, கடிந்து கொள்கிறார். இயேசு முன்னுரைத்தது போல இன்று

சபைகளிலே அன்பு தணிந்த நிலை காணப்படுகிறது (மத்தேயு 24:12). தேவ பிள்ளைகள் மத்தியிலே காணப்படும் ஜெபக்குறைவு, வேத வாசிப்பில் ஆர்வமின்மை, ஆத்தும பாரமின்மை, ஆவிக்குரிய அலட்சியப் போக்குகள், நிர்விசாரம், உலக சிநேகம் அனைத்தும் அவரது வருகைக்கான அடையாளங்களாக இருக்கிறது (2 தீமோத்தேயு 3: 5).

### 3. விசுவாச துரோகம்

இது சத்தியத்தை மறுதலிக்கிற சுபாவம். சபைகளிலே இன்று பரிசுத்த ஆவியானவரின் அற்புதங்களையும், அசைவாடுதலையும் நம்பாமல் அவைகளை மறுக்கும் சுபாவம் காணப்படுகிறது. இரட்சிப்புக்கு இயேசு மட்டும் தான் வழி என்ற உணர்வும் மங்கி வருகிறது. இதைக் குறித்து "மனுஷகுமாரன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று இயேசு துக்கத்துடன் அங்கலாய்க்கிறார் (லூக்கா 18:8).

### 4. உபத்திரவங்கள்

இன்று இயேசுவின்மேல் வைத்த விசுவாசத்தின் காரணமாக ஊழியர்களும், சபைகளும், கிறிஸ்தவர்களும் பலவிதமான உபத்திரவங்கள் அனுபவிக்கிறதை நாம் அறிவோம். இதை அவரது வருகையின் அடையாளங்களில் ஒன்றாக இயேசு முன்னுரைத்திருக்கிறார் (மத்தேயு 24:9).

### 5.சுவிசேஷம் அறிவிக்கப்படுதல்

"இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" என்று இயேசு கூறியுள்ளார் (மத்தேயு 24:14). இன்று பல்வேறு சமூக ஊடகங்கள், இணையதளங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பற்பல ஊழியங்கள் வாயிலாக நற்செய்தி உலகம் முழுவதிலும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

## II. உலகத்தில் காணப்படும் அடையாளங்கள்
## Global Signs

### 1. பாவத்தின் பெருக்கம்

கடைசி காலத்தில் அக்கிரமம் மிகுதியாகும் என்று வேதம் கூறுகிறது (மத்.24:12). கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என்றும், மனிதர்கள் பணப்பிரியராயும், பரிசுத்தமின்றியும், கொடுமை உள்ளவர்களாய், சுகபோகப் பிரியராய் இருப்பார்கள் என்று பவுல் கூறுகிறார் (2 தீமோ.3:1-5). இன்று கொலை, விபச்சாரம், குடிவெறி, கற்பழிப்பு, கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை போன்ற கொடிய பாவங்கள் மனிதர்களிடையே மலிந்து கிடப்பதை பார்க்கிறோம். கடைசி காலங்களில் நோவா மற்றும் லோத்துவின் நாட்களில் நடந்தது போலவே காரியங்கள் நடக்கும் என்று இயேசு கூறியதை நினைவு கூறுவோமாக (லூக்கா 17:25-29).

### 2. அறிவு பெருக்கம்

தானியேல் 12:5-ல் இதைக் குறித்து வாசிக்கிறோம். அறிவு பெருக்கத்தைக் குறித்து ஒரு புள்ளி விவரம் பின்வருமாறு கூறுகிறது.

நோவா காலம் முதல் கிபி 1800 வரை – 1 மடங்கு அறிவு பெருக்கம்
கிபி 1800 –1900 (100 ஆண்டுகள்) – 2 மடங்கு அறிவு பெருக்கம்
கிபி 1900–1950 (50 ஆண்டுகள்) –2 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1950 க்கு பிறகு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மடங்கு அறிவு பெருக்கம் ஏற்படுகிறது. இன்று மருத்துவம், விஞ்ஞானம், கணினி துறைகளில் உள்ள அறிவு பெருக்கம் நாம் அறியாததல்லவே.

### 3.யுத்தங்கள்

கடைசி காலங்களிலே யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறாரே (மத்.24:6). உலக நாடுகளிடையே சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்குடன் 1945 ஆம் ஆண்டு "ஐக்கிய நாடுகள் சபை" (UNO) நிறுவப்பட்டது. யுத்தங்கள் நிகழாது என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக 50க்கும் அதிகமான யுத்தங்கள் நடந்தன என்று சரித்திரம் கூறுகிறது. இன்றும் அநேக உள்நாட்டுப் போர்களும், இரசாயன அணு ஆயுதங்களின் பிரயோகமும் மிகவும் அதிகரித்துள்ளது.

### 4. பூமியதிர்ச்சி, பஞ்சம், கொள்ளை நோய்கள்

அடுத்ததாக மத்தேயு 24:7ல் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் என்று இயேசு கூறுகிறார். இந்த நூற்றாண்டில் மட்டும் ரிக்டர் அளவில் 6.5க்கும் அதிகமான 150க்கும் மேற்பட்ட பூமி அதிர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. மேலும் யுத்தங்களை தொடர்ந்து கடுமையான பஞ்சங்கள், மற்றும் கொரோனா, எய்ட்ஸ், சார்ஸ் போன்ற கொடிய கொள்ளை நோய்கள் இவற்றால் மரித்த மக்கள் திரள் ஏராளம். இவை அனைத்தும் இயேசுவின் வருகை மிக சமீபம் என்பதை நமக்கு சுட்டிக்காட்டும் உலகத்தில் காணப்படும் அடையாளங்கள் ஆகும்.

## III. யூதர்கள் மத்தியில் காணப்படும் அடையாளங்கள்
## Jewish Signs

லூக்கா 21-ம் அதிகாரம் 29 ஆம் வசனத்தில், இயேசு அத்திமரம் துளிர்த்தலை பற்றியதான ஒரு உவமையைக் கூறுகிறார். இவ்வுவமையில் அத்திமரம் என்பது யூதர்களைக் குறிக்கிறது. கிபி 70ஆம் ஆண்டிற்குப் பின் யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். யூதர்களுக்கென்று ஒரு தேசம் பல நூற்றாண்டுகளாக இல்லாதிருந்தது. 1948 மே 15-ல் தான் இஸ்ரவேல் தேசம் யூதர்களுக்கென்று தரப்பட்டது. அதுமுதல் ஏசாயா 11:11,12லும், எரேமியா 23:3,8லும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே பூமியின் நான்கு திசைகளிலும் இருந்து யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில் வந்து குடியேறினர். இன்று சுமார் 72 லட்சம் யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கிறார்கள். இந்த அடையாளங்கள் ஆண்டவராகிய இயேசு வாசற்படியில் நிற்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இப்படியாக, வருகைக்கான அடையாளங்களைக் குறித்து அறிந்த நாம் இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுவது எப்படி என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

## இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?
## HOW TO PREPARE OURSELVES FOR HIS COMING?

### 1. சுத்திகரித்துக் கொள்ளுங்கள்
### Purify Yourself

இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று விசுவாசித்து காத்திருக்கிற ஒவ்வொருவரும் தங்களை சுத்திகரித்து கொள்வார்கள் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:2,3). "காலம் சமீபமாயிருக்கிறது: நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தம் ஆகட்டும்" என்று இயேசு கூறுகிறார் (வெளி.22:11). நமது பரிசுத்தம் எப்படி இருக்கிறது? 1 கொரிந்தியர் 6:9,10 வசனங்கள் பாவிகள் தேவ ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்று எச்சரிக்கிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பது இல்லை என்பதே வேதத்தின்

உறுதியான முழக்கம் (எபிரெயர் 12:14). பொல்லாத மனிதர்களின் மத்தியிலே நீதிமானாக, உத்தமனாக வாழ்ந்து தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்ட நோவாவைப் போல நாமும் பரிசுத்தத்தில் உறுதியாய் நிற்போமாக (ஆதியாகமம் 6:8,9). மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்துடனும் பரிசுத்த ஆவியின் உதவியுடனும் பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரிந்தியர் 7:1).

ஒருவேளை இதை வாசிக்கிற நீங்கள் இதுவரை உங்கள் வாழ்க்கையில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாவிட்டால் இன்றைக்கு உங்கள் இருதயத்தை இயேசுவுக்கு கொடுங்கள். இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு பாவமன்னிப்பு பெறாதவர்கள் இயேசுவின் வருகையில் அவரை சந்திக்க முடியாது. இன்றே இரட்சணிய நாள் (2 கொரிந்தியர் (6:2).

## 2. விழித்திருந்து ஜெபியுங்கள்
## Pray with Watchfulness

“எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருங்கள்” என்ற பேதுருவின் வார்த்தைகளை நினைவுகூறுவோம் (1 பேதுரு 4:7). இயேசுவும் தமது வருகைக்கான அடையாளங்களை சொல்லிவிட்டு, “மனுஷகுமாரன் முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்” (லூக்கா 21:36) என்று கூறுகிறார். விழிப்பாக இருந்து ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தை, இயேசு மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதை மாற்கு 14:37,38 மற்றும் மாற்கு 13:33-37 ஆகிய வசனங்களில் காணலாம். தானியேலைப் போலவும் (தானியேல் 6:10), தாவீதைப் போலவும் (சங்கீதம் 55:17) நாம் ஜெபிக்க வேண்டும். பவுல் கூறுவதை போல இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:17). நாம் நமக்காக மட்டும் சுயநலமாக ஜெபிக்காமல் அனைவருக்காகவும் ஜெபிக்கவேண்டும் (எபேசியர் 6:18). வருகைக்கான மிக முக்கிய ஆயத்தங்களில் ஒன்று ஜெபம். கிறிஸ்தவ வாழ்வின் அச்சாணி ஜெபம். தினமும் ஒரு மணி நேரம் கூட நம்மால் ஜெபிக்க முடியாது என்றால், எப்படி நித்திய காலமாக தேவ பிரசன்னத்தில் வாழமுடியும்? ஜெபமின்றி ஜெயமில்லை.

## 3. சுவிசேஷத்தை அறிவியுங்கள்
## Proclaim the Good news

எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கர்த்தர் தமது வருகையை குறித்து பொறுமையாய் காத்துக் கொண்டிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (2 பேதுரு 3:9). “இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்” என்று இயேசுவும் கூறியிருக்கிறார் (மத்தேயு 24:14). நாம் சுவிசேஷம் அறிவிக்க தவறினால். உலகம் தனது தத்துவங்களையும், மாயையான வேதாந்தங்களையும் மக்களுக்கு போதித்து மோசம் போக்க தயாராக இருக்கிறது. இதை உணர்ந்தவர்களாய் நாம் முழுமூச்சாக சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். நோவா 120 வருடங்களாக தொய்வின்றி தொடர்ந்து நீதியை பிரசங்கித்தார் (2பேதுரு 2:5). பவுல் சுவிசேஷத்தை குறித்து வெட்கப்படாமல் அனைவருக்கும் நற்செய்தி அறிவித்தார் (ரோமர் 1:16). நாமும் வெட்கப்படாமல் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நற்செய்தியை அறிவிப்போம். அப்படி செய்வதின் மூலம் நாமும் ஆயத்தப்படலாம். மற்றவர்களையும் இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுத்தலாம்.

### 4.விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்
### Persevere in Faith

கடைசி காலத்தில் கொடிய வஞ்சகமுள்ள மனசாட்சியற்ற பொய்யர்கள், பலரது விசுவாசத்தைக் கெடுப்பார்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது (1 தீமோ.4:1). ஆகவே நாம் தெளிந்த புத்தியுடனும், விழிப்புடனும், விசுவாசத்தில் உறுதியாய் இருந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுருவின் நிருபத்தில் வாசிக்கிறோம் (1 பேதுரு 5:8,9), பிசாசு தனக்கு கொஞ்சம் காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து அநேகரை விசுவாசத்தினின்று வழுவி போகச் செய்ய முனைகிறான். ஆனால் நாமோ அவனை இயேசுவின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டு, நம் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும் (வெளி.12:11,12). நமது விசுவாசம் பரீட்சிக்கப்படும் (1 பேதுரு 1:7). அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போல விசுவாசத்தில் உறுதியாய் நிற்க வேண்டும் (தானி.3:18). நாம் விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டுவது அவசியம் என்று யூதா நிருபத்தில் வாசிக்கிறோம் (யூதா 3). உபத்திரவத்தின் மத்தியில் 'அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்' என்று யோபுவை போன்று விசுவாச அறிக்கை செய்யவேண்டும் (யோபு 13:15). கடைசியாக "யாரும், எதுவும், இயேசுவின் அன்பை விட்டு என்னை பிரிக்க முடியாது" என்ற விசுவாசத்தின் நிச்சயமும், வைராக்கியமும் பவுலை போன்று நமக்குள் இருக்க வேண்டும் (ரோமர் 8:36-39).

பிரியமானவர்களே, இந்த தியானம் உங்களுக்கு தெளிவையும். உற்சாகத்தையும், தைரியத்தையும் ஏற்படுத்தி இருக்கும் என்று விசுவாசிக்கிறேன். விழிப்பாயிருங்கள்; ஆயத்தமாய் இருங்கள். மாரநாதா! கர்த்தராகிய இயேசுவே வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக! ஆமென்.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

## நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# இந்தியாவில் கிறிஸ்தவம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## தோமாவின் ஊழியம்

இயேசுவின் அப்போஸ்தலர்களின் ஒருவரான தோமா கி.பி 52ல் கேரளா வந்து ஊழியம் செய்தார். நற்செய்தி அறிவித்து 7 சபைகளை நிறுவினார். பல இலட்சம் மக்களை கிறிஸ்துவுக்குள் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. பின்பு தமிழ்நாட்டிற்கு வந்து சில ஆண்டுகள் தற்போதுள்ள சென்னையில் தங்கி நற்செய்தி அறிவித்து சபைகளை நிறுவினார். பொறாமை கொண்ட பிராமணர்கள் தோமா மலை என்ற இடத்தில் அவரை ஈட்டியால் குத்தி கொலை செய்தனர். அவருடைய உடல் சென்னை மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அங்கே ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

கி.பி 4ம் நூற்றாண்டில் இருந்து அந்தியோகியா சபையோடு இந்தியாவில் இருந்த பிரதிநிதிகள் தொடர்பு வைத்திருந்தார்கள் என கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இந்திய சபையில் சரித்திரம் எழுதப்படவில்லை. 16ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மிஷனரியாக போர்ச்சுக்கல்லில் இருந்து பிரான்சிஸ் சேவியர் என்ற மிஷனரி இந்தியா வந்து ஊழியம் செய்தார். கடற்கரை பகுதிகளில் மீன் பிடிப்போர் மத்தியில் ஊழியஞ்செய்து அநேக சபைகளை நிறுவினார்.

பிந்திய நாட்களில் கிழக்கிந்திய கம்பெனி இங்கிலாந்தில் இருந்து இந்தியா வந்து வியாபாரம் செய்தது. மிஷனரி ஊழியத்தை இவர்கள் எதிர்க்கவே செய்தனர். நவீன கால மிஷனரிகளின் தந்தை என்று அழைக்கப்படுகிற வில்லியம் கேரி (1761-1834) இங்கிலாந்தில் இருந்து இந்தியா வந்து கல்கத்தாவில் தங்கி ஊழியஞ்செய்தார்.

சுமார் 40 மொழிகளில் முழு வேதாகமமும் மற்றும் வேதாகம பகுதிகளை இந்திய மொழிகளில் மொழி பெயர்த்தார். இங்கிலாந்தில் இருந்து CMS (Church Mission Society), LMS (London Mission Society) ஆகிய ஸ்தாபனங்கள் இந்தியாவிற்கு மிஷனரிகளை அனுப்பினர். ஜெர்மனியில் இருந்து 4ம் பிரெட்ரிக் என்ற டென்மார்க் அரசன் சீகன்பால்கு என்பவரை ஜெர்மனியில் இருந்து அனுப்பினார். இவர் தமிழ்நாட்டில் உள்ள தரங்கம்பாடிக்கு வந்து அங்கே தங்கி தமிழ் கற்று நற்செய்தி அறிவித்து சபைகளை கட்டினார். வேதாகமத்தை தமிழில் மொழிபெயர்த்தார். இந்திய மொழிகளில் தமிழ் மொழியில் தான் வேதாகமம் முதன்முறையாக மொழிபெயர்க்கப்பட்டது. இங்கிலாந்தில் இருந்து C.T.ஸ்டட், G.U.போப், ராபர்ட் கால்டுவெல், ராக் லாண்ட் ஆகியோர் மிஷனரிகளாக தமிழ்நாட்டிற்கு வந்து ஊழியஞ்செய்தனர். ரிங்கிள் தோபே என்பவர் ஜெர்மனியிலிருந்து இந்தியா வந்து ஊழியஞ்செய்தார்.

## இந்தியாவில் பெந்தெகொஸ்தே எழுப்புதல்

திருநெல்வேலியில் CMS உபதேசியராக அருளப்பன் என்பவர் ஊழியஞ்செய்து வந்தார். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட எழுப்புதலை குறித்து கேள்விப்பட்டு, அப்படிப்பட்ட ஒரு எழுப்புதல் இந்தியாவிற்கு வர ஊக்கமாய் ஜெபித்தார். அவருடன் பலரும் ஜெபித்தனர். 1860 மார்ச் மாதம் 4ம் தேதி திருநெல்வேலியில் கூடி ஜெபித்து வந்தவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் இறங்கினார். அந்நிய பாஷைகளை பேசினார்கள். தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டன. பலர் தேவ தரிசனங்களை கண்டனர். சிலர் வானத்தில் அடையாளங்களை பார்த்தனர். இது பெந்தெகொஸ்தே அனுபவம் என்று இவர்களுக்கு தெரியாது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற அருளப்பன் தமிழ்நாட்டிலும், கேரளாவில் பல பகுதியிலும் சென்று இந்த அனுபவத்தை பிரசங்கித்தார். பலர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றனர்.

நார்வே நாட்டை சேர்ந்த தாமஸ்பேரட் என்பவர் லாஸ் ஏஞ்சலஸ் எழுப்புதலில் பங்குபெற்று இந்தியா வந்து 1908ல் குன்னூரில் கூடியிருந்த மிஷனெரிகளுக்கு பெந்தெகொஸ்தே சத்தியத்தை பிரசங்கித்தார். மிஸ் பஷன்சில், மிஸ் ஆல்டிவிள்கிள் என்ற மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் எழுப்புதல் கூட்டம் நடத்தினர்.

### கேரளா

ஜார்ஜ் பெர்க் என்ற அமெரிக்க மிஷனெரி 1901 முதல் பெங்களூரில் தங்கி சுயாதீன ஊழியம் செய்து வந்தார். 1908ல் அமெரிக்க சென்று லாஸ் ஏஞ்சல்ஸ் எழுப்புதலில் பங்குபெற்று, 1909ல் இந்தியா வந்து கேரளாவில் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். அடுத்த ஆண்டு தன்னுடைய உடன் ஊழியராய் இருந்த சார்லஸ் கம்மின்ஸ் (ஆங்கிலோ இந்தியன்)-ஐ கூட்டி சென்று கேரளாவில் எழுப்புதல் கூட்டம் நடத்தினார். 1914ல் ராபர்ட் குக் என்ற அமெரிக்க மிஷனரியை கேரளா கூட்டி சென்று கூட்டங்களை நடத்தினார். கேரளாவில் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. 1914ல் துவையூர் என்ற இடத்தில் முதல் பெந்தெகொஸ்தே சபை நிறுவப்பட்டது.

### மகராஷ்ட்டிரா

புனே அருகிலுள்ள முக்தி மிஷன் என்ற நிறுவனத்தை பண்டித ராமாபாய் நடத்தி வந்தார்கள். இந்த விடுதியில் தங்கியிருந்த பெண்கள் எழுப்புதலுக்காக ஜெபித்து வந்தனர். 1906ல் இந்த பெண்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினார்.

### குஜராத்

1906ல் குஜராத்தில் எழுப்புதலுக்காக ஜெபித்து வந்த பெண்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர்.

### வடஇந்தியா, கிழக்கு இந்தியா

லாஸ் ஏஞ்சல்ஸ் எழுப்புதலில் பங்குபெற்ற ஆல்பிரெட் கேஸ் என்ற மிஷனரி கல்கத்தா வந்து பெந்தெகொஸ்தே சத்தியத்தை பிரசங்கித்தார். இவர் மூலமாக கிழக்கிந்தியா மாநிலங்களிலும் பெந்தெகொஸ்தே சத்தியம் பரவிற்று.

தொடரும்...



# விசுவாசம்

**திருமதி. கெட்சியாள் மோகன்**

President, Women's Fellowship Department

விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் என் வாழ்த்துதல்கள். விசுவாசத்தை குறித்த செய்தியை இந்த இதழில் உங்களோடு பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேன்.

எபிரெயர் 11:1-ன் படி விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப் படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கின்றது. நாம் அவரைக் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்; அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறோம் (1பேதுரு 1:8) இவ்வகையான விசுவாசத்தை நம்மில் துவக்குகிறவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. அவரே நமக்கு விசுவாச அளவைப் பகிர்ந்தளிக்கிறார் (ரோமர் 12:3). நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று 1 யோவான் 5:4-ல் வாசிக்கிறோம்.

வேதத்தில் சிலரை "அற்ப விசுவாசிகளே" என்று இயேசுவானவர் கூறுகிறார் அவர்கள் யாரென்று பார்ப்போம்.

## பயப்படுகிறவர்கள்

மத்தேயு 8:26-ல் பயப்படுகிறவர்களைப் பார்த்து இயேசு அற்பவிசுவாசிகள் என்று அழைக்கிறார். நமக்குள்ளும், நம்மோடும் இருக்கிற தேவனைக் காணாமல் நம்முடைய சூழலைக் கண்டு நாம் பயப்படுவோமானால் நம்முடைய விசுவாசம் அற்பமானதாக இருக்கும். "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல்" என்று 1 தீமோத்தேயு 1:7-ல் வாசிக்கிறோம். தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடுக்கவில்லை. எனவே பயம் தேவனிடத்தில் இருந்து வருவதில்லை; அது சாத்தானிடத்தில் இருந்து வருவதால் நாம் பயத்தைப் புறம்பே தள்ள வேண்டும். சூழ்நிலை மாறும் என்று விசுவாசித்து உறுதியாய் நிற்க வேண்டும்.

## கவலைப்படுகிறவர்கள்

மத்தேயு 6:30-ல் உணவிற்காகவும், உடைக்காகவும், ஜீவனுக்காகவும், சரீரத்துக்காகவும் கவலைப்படுகிறவர்களை இயேசு அற்பவிசுவாசிகள் என்று அழைக்கிறார். கவலைப்படுகிறதினால் நம் சரீர அளவோடு ஒரு முழத்தைக்கூட கூட்டமுடியாது. ஆகாயத்துப்பட்சிகளைப் பிழைப்பூட்டுகிறவர், காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிக்கிறவர் அவைகளை காட்டிலும் விசேஷித்தவர்களாகிய நம்மை போஷித்துக் காப்பாற்றுவது அதிக நிச்சயம். ஆகவே நாம் இவைகளைக் குறித்துக் கவலைப்படாமல் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவோமானால், மற்றவைகளை தேவன் "கூட கொடுப்பது" அதிக நிச்சயம்.

## சந்தேகப்படுகிறவர்கள்

மத்தேயு 14:31-ல் பலமாயிருக்கிறக் காற்றைக்கண்டு, அமிழ்ந்து போய்க் கொண்டிருந்த பேதுருவைப் பார்த்து ஆண்டவர் அற்பவிசுவாசியே என்கிறார். எதிராய் வந்து கொண்டிருக்கிற சூழ்நிலைகளில் அமிழ்ந்து போய்க்கொண்டிருக்கிற சகோதரனே, சகோதரியே, சூழ்நிலையின் மேலிருந்து உன் கண்களை எடுத்து விட்டு, உனக்கு முன்பாக நிற்கிற இயேசுவை நோக்கிப் பார்ப்பாயானால், உன் விசுவாசம் அதிகரிக்கும், நீ மூழ்கிப் போகமாட்டாய்.

## முந்தினவைகளை நினைக்காதவர்கள்

மத்தேயு 16:8-10 இங்கு இயேசு சொன்ன காரியத்தின் தாற்பரியத்தை உணராமல், ஒன்றுமில்லாமல் இருந்தாலும் அவரால் போஷிக்க முடியும் என்று அவர் முன்பு செய்த அற்புதங்களை நினைக்காமல் இருந்த சீஷர்களைப் பார்த்து இயேசு கடிந்து கொள்கிறார். நாமும் ஆண்டவர் என்ன சொல்லுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிக்காமல், தேவன் இதற்கு முன்பு நமக்கு செய்த அற்புதங்களை நினைவு கூறாமல், செய்யாமல் விட்டக் காரியங்களைக் குறித்து கவலைப்படக் கூடியதாயிருக்கும். இப்படிப்பட்ட நிலைக்கு தேவன் நம்மை விலக்கிக் காப்பாராக!

## ஆச்சரியப்படும் விசுவாசம்

மத்தேயு 8:8,10-ல் நூற்றுக்கு அதிபதி "ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று கூறுகிறான். தேவனுடைய வார்த்தையின் மேல் அவனுக்கிருந்த விசுவாசத்தைப் பார்த்து தேவன் ஆச்சரியப்பட்டார். உடனே அவனுக்கு ஒரு அற்புதத்தை செய்து அவனை மகிழ்வித்து அனுப்பினார். நாமும் தேவனுடைய வார்த்தையின் மேல், அவர் நமக்கு கொடுத்திருக்கும் வாக்குத்தத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் உறுதியாய் இருப்போமானால், ஆண்டவர் நம்முடைய விசுவாசத்தைக் கண்டு உடனடியாக அற்புதம் செய்வார். நம்மைக் குறித்து அவருடைய இருதயம் மகிழும்.

## எதிர்பார்க்கும் விசுவாசம்

மத்தேயு 17:20 கடுகு விதையளவு விசுவாசம் இருந்தால், மலையைப் பார்த்துத் தள்ளுண்டு போ என்று கூறலாம்; காட்டத்தி மரத்தை வேரோடு பிடுங்கி எறியலாம் (லூக்கா 17:5,6) உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசுவானவர் கூறியிருக்கிறார். தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது கடுகு விதையளவு விசுவாசமே. அவ்வளவு சிறிய விசுவாசம் நமக்கிருக்குமானால், நமக்கு முன்பு மலை போல் நிற்கும் பிரச்சனைகளை பார்த்து தூரப் போகும்படி நாம் கட்டளைக் கொடுக்கலாம். தேவன் நமக்கு விசுவாசத்தை அளித்து அதை வர்த்திக்கப்பண்ணும்படி நாம் அவரிடம் வேண்டிக்கொள்வோம். அவரே நமக்கு விசுவாசத்தைப் பகிர்ந்து அளிக்கிறவர்.

தேவன் கடிந்துக் கொள்ளக்கூடிய விசுவாசத்தை ஒழித்துவிட்டு, தேவன் ஆச்சரியப்படக்கூடிய விசுவாசத்தை உடையவர்களாக மாறவும், தேவனை மகிழ்வித்து, நீங்கள் எதிர்பார்க்கும் அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளவும் தேவன் உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக!

# ஒரு வேதாகமத்தின் டைரிக்குறிப்பிலிருந்து

**ஜனவரி:** அநேக வேலைகள் நிறைந்த நெருக்கமான நேரம் எனக்கு. குடும்பத்தில் பலர் என்னை இந்த வருடத்தில் வாசித்து முடிக்க முடிவு செய்து, முதல் இருவாரங்கள் என்னை உபயோகித்தனர். ஆனால் இப்போதோ என்னை முற்றிலும் மறந்துவிட்டனர்.

**பிப்ரவரி:** கடந்த வாரம் என் உரிமையாளர், சில மணித்துளிகள் என்னை உபயோகித்தார். எதற்குத் தெரியுமா? இன்னொருவரோடு அவருக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் இவருக்கு சாதகமாக சில வசனங்களைக் கண்டுபிடிக்க.

**மார்ச்:** தாத்தா, வீட்டிற்கு வந்திருக்கிறார். சுமார் ஒரு மணிநேரம் என்னைத் தன் மடிமேல் வைத்து 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தை வாசித்தார்.

**ஏப்ரல்:** இன்று என்னைப் பெட்டி ஒன்றில் போட்டு மூடிவிட்டார்கள். விடுமுறைக்காக வேறிடம் செல்கிறார்கள் போலும். வீட்டிலேயே என்னை விட்டுச்சென்றால் நலமாயிருக்கும். ஒரு மாத காலமும் பெட்டிக்குள் தானே இருக்கப்போகிறேன்.

**மே:** இன்னும் நான் பெட்டிக்குள் தான்.

**ஜூன்:** வீடு திரும்பியாகிவிட்டது. என் இடத்தில் அமர்ந்திருக்கிறேன். தற்போது என்னோடு சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். யார் தெரியுமா? மூன்று கதைப்புத்தகங்களும் நான்கு நகைச்சுவை ஏடுகளும் என்மேல் ஏறி உட்கார்ந்துள்ளனர்.

**ஜூலை:** இம்மாதத்தில் ஒரே ஒருநாள் மட்டும் நான் அதிகமாய் உபயோகிக்கப்பட்டேன். காரணம் என் உரிமையாளர் ஏதோ ஓரிடத்தில் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதால்!!

**ஆகஸ்ட்:** என் பக்கங்களில் சில பச்சை நிற சாயம் படிந்துள்ளது. அழகிய பூக்கள் என் பக்கங்களுக்கிடையில் வைத்து பராமரிக்கப்பட்டதன் விளைவு.

**செப்டம்பர்:** துண்டுப் பேப்பர்களை செருகிவைக்கும் ஒரு குப்பைப் புத்தகமாக நான் காட்சியளிக்கிறேன். அநேக செய்தித் தாள்களின் பகுதிகள் எனக்குள் அடைக்கப்பட்டுள்ளது.

**அக்டோபர்:** குடும்பத்தில் ஒருவர் மிகவும் வியாதிப்பட்டிருப்பதால் இன்று என்னைச் சிறிது உபயோகித்தார்கள். நன்றாக துடைக்கப்பட்டு மேஜையின் நடுவில் வைக்கப்பட்டுள்ளேன்.

**நவம்பர்:** யாரும் வியாதிப்படாததால், என் பழைய இடத்திற்கே போய்விட்டேன்.

**டிசம்பர்:** கிறிஸ்மஸ்க்காக ஆயத்தப்படுகிறார்கள். நிச்சயம் வண்ணப் பேப்பர்களுக்கடியில் தான் என் இடம். இவ்வருடம் அவ்வளவாய் நான் உபயோகிக்கப்படவில்லை.

## உங்கள் வேதாகமத்தின் நிலை எப்படி?

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால்
நானும் உன்பிள்ளைகளை மறந்துவிடுவேன் (ஓசியா 4:6).



# சங்கீத புஸ்தகம்

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

சங்கீத புஸ்தகம் 150 கவிதைகளைக் கொண்ட செய்யுள் ஆகமம் ஆகும். இஸ்ரவேல் மக்கள் தங்கள் ஆராதனைகளில் பாடல்களாகவும், விண்ணப்பங் களாகவும் சங்கீதங்களைப் பயன்படுத்தினர். பண்டிகைகள், வெற்றி விழாக்கள், திருமணம் போன்ற சிறப்பு நிகழ்வுகளிலும் இவை பயன்படுத்தப்பட்டன, (யாத்.15:21; நியா.15:24; 1சாமு.1ம் அதிகாரம்; 1நாளா.15:16; 2நாளா.5,6,7 அதிகாரங்கள்). யெகோவா தேவனை உயர்த்திப்பாடும் துதிசங்கீதங்களாகவும், தனிமனித வாழ்வின் பாடுகளில் புலம்பிப்பாடும் ஜெப விண்ணப்பங்களாகவும், கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றிசெலுத்தும் பாடல்களாகவும் சங்கீதங்கள் பாடப்பட்டன. இப்புத்தகம் இஸ்ரவேலரின் பக்தி நூலாகக் கொள்ளப்பட்டது.

சங்கீதங்களில் பெரும்பாலானவை இசைக்கு ஏற்ப எழுதப்பட்டன. சிலர் கருதுவதுபோன்று வேதாகமத்தில் பெரிய புத்தகம் சங்கீத புஸ்தகம் அல்ல; **எரேமியா** புத்தகமே வேதாகமத்தில் பெரிய புத்தகம்.

**I.சங்கீத புஸ்தகத்தின் கருப்பொருள் வசனம்:** "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்".

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அதில் தியானமாயிருக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான்; மாறாக, துன்மார்க்கருடைய வழியோ அழியும் என்று இந்த வசனம் கூறுகிறது. ஏனென்றால், யெகோவா தேவன் இராஜாதி இராஜாவாயிருக்கிறார், அவருடைய மேசியாவாகிய கிறிஸ்து இவ்வுலகில் ஆளுகை செய்வார்.

சங்கீத புஸ்தகம் சரித்திரத்தையும், செய்யுளையும், ஜெபங்களையும், பாடல்களையும், வெற்றி முழக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. பழைய ஏற்பாட்டிலுள்ள முக்கிய நிகழ்வுகளை சங்கீதங்கள் குறிப்பிடுகின்றன: சிருஷ்டிப்பைப் பற்றிய குறிப்புகள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் முற்பிதாக்களுடன் தேவன் செய்த உடன்படிக்கை, இஸ்ரவேலரின் யாத்திரை விபரங்கள், நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல், வாக்குத்தத்த தேசத்தை ஜெயித்து சுதந்தரித்தல், தாவீதுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை எருசலேம் தேவாலயம், பாபிலோனுக்கு சிறைசென்ற விபரங்கள், சிறைப்பட்டவர்கள் எருசலேமுக்குத் திரும்பிவருதல் போன்ற அனைத்து விபரங்களையும் சங்கீதங்களாகக் காண்கிறோம்.

நமது இன்ப துன்ப நேரங்களிளெல்லாம் நாம் தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும் என்றும், நம்மைக் கவனித்துக்கேட்டு பதிலளிக்கிற கர்த்தர் நமக்கு மிகவும் நெருக்கமாயிருக்கிறார் என்றும் சங்கீதங்கள் நமக்குச் சொல்லுகின்றன. அவர் நமக்குப் பக்கத்திலிருக்கிறார், நமக்கு முன்னே செல்கிறார், நம்மைச் சூழ்ந்திருக்கிறார், நம்மேல் ஆளுகை செய்கிறார், நமக்குள்ளே வாசம் செய்கிறார் என்ற விபரங்களே சங்கீதங்களில் பரவிக்கிடக்கிற கருப்பொருள் செய்தி ஆகும்.

## II.சங்கீத புஸ்தகத்தின் ஆசிரியர்கள்: (The Authors of the Psalms)

வேதாகமத்திலுள்ள வேறு எந்த புஸ்தகத்தையும்விட ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் எழுதப்பட்டது சங்கீத புஸ்தகமே! ஏழு ஆசிரியர்களுடைய பெயர்கள் தரப்பட்டுள்ளன; ஆக்கியோன் யார் என தெரியாத சங்கீதங்களும் பல உண்டு.

- **மோசே:** தனது சகோதரனாகிய ஆரோன் மரித்தபோது 90ம் சங்கீதத்தை ஜெபபாடலாகப் பாடினான்.
- **தாவீது அரசன்** எழுதிய சங்கீதங்களாக 73 தரப்பட்டுள்ளன. தனது வாழ்க்கையின் மிகக் கடினமான காலங்களிலும், இழப்பின் காலங்களிலும், சந்தோஷப் பெருக்கிலும், பாவத்தில் வீழ்ந்த காலத்திலும் தாவீது எழுதிப் பாடிய சங்கீதங்களை நாம் காண்கிறோம். இவ்விதப் பல்வேறு அனுபவங்களில் ஒரு பக்தன் எப்படி ஜெபிக்க முடியும் என்பதை தாவீது பாடிய சங்கீதங்கள் நமக்குச் சொல்லுகின்றன.
- **சாலமோன்:** 1இராஜாக்கள் 4:32-ல் சாலமோன் 3000 பாடல்களைப் பாடினான் எனப் பார்க்கிறோம். தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாயிருந்த இவன் பாடிய 2 சங்கீதங்கள் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.
- **ஆசாப்** என்ற அரசவைப் பாடகர்குழுத் தலைவனும், அவனது குமாரரும் பாடிய 12 சங்கீதங்கள் தரப்பட்டுள்ளன. (1நாளா.25:1; நெகே.7:44; 12:46-47).
- **கோராகின் புத்திரர்** பாடியவை 10 சங்கீதங்கள். மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாய் கலகம்பண்ணிய கோராகையும் அவனைச் சார்ந்தவர்களையும் பூமி பிளந்து விழுங்கிப் போட்டது. அதில், கோராகின் குமாரரோ சாகவில்லை, (எண்.26:11). அவர்கள் கர்த்தரைவிடாமல், தலைவர்களுக்குக் கீழ்படிந்து தொடர்ந்து கர்த்தரை சேவித்தனர், சங்கீதங்களையும் பாடினார்.
- **ஏமான்** என்பவன் ஒரு சங்கீதத்தைக் (88-ம்சங்கீதம்) கோராகின் புத்திரருடன் இணைந்து பாடினான்.
- **ஏத்தான்** இவன் சாலமோனைப்போல ஞானமுள்ளவன். இவனும் ஒரு சங்கீதத்தை எழுதினான், (89ம் சங்கீதம்). இது ஒரு போதக சங்கீதம் ஆகும்.

## III.சங்கீதங்கள் எழுதப்பட்ட காலம்: (The Date of Writing)

பெரும்பான்மையான சங்கீதங்கள் கிமு10-ம் நூற்றாண்டில் (கிமு 1000-900) எழுதப்பட்டவை ஆகும். கீழ்காணும் இரண்டு சங்கீதங்கள்தரும் சரித்திர நிகழ்வுகளை வைத்து சங்கீதங்கள் எழுதப்பட்ட காலத்தைக் கணிக்கலாம்.

**சங்கீதம் 90:** இது மோசே எழுதிய சங்கீதம். தனது சகோதரனாகிய ஆரோன் மரித்தபோது மோசே ஜெபமாக இந்த சங்கீதத்தைப் பாடினான். மொத்தமுள்ள 150 சங்கீதங்களிலும் இதுதான் மிகப்பழமையான சங்கீதமாகும். மோசேயின் காலம் சுமார் கி.மு 1500 எனலாம்.

**சங்கீதம் 137:** இஸ்ரவேல் கிமு.606,597,586 ஆகிய மூன்று காலக்கட்டங்களில் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர். 137-ம் சங்கீதம் சிறைப்பட்டுச்சென்ற இஸ்ரவேலரால் பாபிலோனின் ஆறுகளருகே தங்கியிருந்தபோது பாடியதாகும். 150 சங்கீதங்களிலும் இதுதான் கடைசியாக எழுதப்பட்ட சங்கீதமாகும்.

எனவே சங்கீதங்கள் கி.மு1500க்கும்-586க்கும் இடைப்பட்ட சுமார் 1000 ஆண்டு கால இடைவெளியில் எழுதப்பட்டவை ஆகும்.

## IV.சங்கீத புஸ்தகத்தின் அமைப்பு: (The Structure of the Psalms)

துல்லியமாகச் சொன்னால், ஐந்து சிறிய கவிதைப் புத்தகங்கள் ஒரே புத்தகமாகத் தொகுத்துத் தரப்பட்டதே நமது வேதாகமத்திலுள்ள சங்கீத புஸ்தகமாகும். எனவே, ஒரே சம்பவத் தொடர்ச்சியாக இவற்றை நாம் வாசிக்க இயலாது. காலாகாலமாக சங்கீத புஸ்தகம் **ஐந்து புத்தகப் பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் கடைசி வசனம் "ஆமென், ஆமென்", "தாவீதின்" விண்ணப்பங்கள் முடிந்தது", "ஆமென் அல்லேலூயா", "அல்லேலூயா" போன்ற ஆசீர்வாத வார்த்தைகளுடன் முடிகிறது. இந்த ஐந்து பிரிவுகளையும் பஞ்சாகமத்தின் ஐந்து புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

### A. முதலாம் புத்தகம், சங் 1-41 (ஆதியாகம சங்கீதங்கள்)

ஆதியாகமத்திலுள்ள 50 அதிகாரங்களும் முழு வேதாகமத்துக்கும் முன்னுரையாக அமைவதுபோலவே, சங்கீத புஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களுக்கும் முதல் 41 சங்கீதங்களும் முன்னுரையாக அமைந்துள்ளன.

நமது பிரச்சனை நேரங்களில் **"தேவன் நம் பக்கத்திலிருக்கிறார்"** என்பதையே பிரதானக் கருத்தாகக் கொண்டுள்ளது இப்புத்தகம்.

தாவீதுதான் இதிலுள்ள பெரும்பாலான சங்கீதங்களைப் பாடியுள்ளான். தன்னுடைய பகைஞர்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும் தேவனிடம் தாவீது தனது இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும் சங்கீதங்கள் இந்த முதலாம் புத்தகத்தில் உள்ளன. நமது தேவன் தமக்குப் பயப்படுகிறவர்களை அவர்களுடைய இக்கட்டுகளிலிருந்து விடுவிக்கும் வல்லமையுள்ளவர் என்பதையே இந்த சங்கீதங்களில் நாம் பார்க்கிறோம்.

**B. இரண்டாம் புஸ்தகம் (சங்.42-72) (யாத்திராகம சங்கீதங்கள்) தேவன் நமக்கு முன்னே செல்கிறார், The Lord going before us** என்ற கருப்பொருளை இப்புத்தகத்தில் காண்கிறோம். அவர் நமக்கு முன்னே சென்று நமது சத்துருக்கள்மேல் நியாயம் செய்கிறார். தேவன் பயங்கர பராக்கிரமம் உள்ள ராஜாவாய் புறஜாதி தேசங்களின்மேல், நீதி நியாயங்களைச் செய்கிறார், தம்மில் மகிழ்ந்து களிகூரும் தம் பக்தர்களை விடுவிக்கிறார் என்பது இந்த இரண்டாம் புத்தகம் தரும் பிரதான செய்தியாகும்.

யாத்திராகமத்தில் கர்த்தர் இஸ்ரவேலருக்குத் தந்த விடுதலைகளுக்கு இணையான சங்கீதங்களை இங்கு காண்கிறோம்.

### C.மூன்றாம் புஸ்தகம் (சங். 78-89) (லேவியராகம சங்கீதங்கள்)

இப்புஸ்தகத்திலுள்ள பெரும்பாலான சங்கீதங்கள் ஆசாப் மற்றும் **நம்மைச்சுற்றிலும் இருக்கிற தேவன், The Lord of around us** என்பதே இந்த சங்கீதங்களின் மையப்பொருள். அவனுடனுள்ள தேவாலயப் பாடகர் குழுவினரால் பாடப்பட்டவை, (1நாளா.25:1). தேவன் முழு இஸ்ரவேல் தேசத்துடனும் கொண்டிருந்த உறவினை இவை விவரிக்கின்றன. தலைமுறை தலைமுறைக்கும் தமது உண்மையைக் காண்பிக்கிற கர்த்தரைப் பற்றிய பாடல்கள் இவை. சிலர் கருதுவதுபோல லேவியராகமப் புத்தகம் ஆசாரியருக்கும் லேவியருக்குமுரிய ஆராதனைக் கையேடு அல்ல. எனவே இந்த சங்கீதங்கள் தேவன் இஸ்ரவேலருடன் கொண்டிருந்த உறவையே பிரதானப்படுத்துகின்றன.

### D.நான்காம் புஸ்தகம் (சங் 90-106) (எண்ணாகம சங்கீதங்கள்)

**"தேவன் நமக்கு மேலே இருக்கிறார், The Lord is above us"** என்பதை அழுத்திச்

சொல்லும் சங்கீதங்கள் இவை. "கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்" "The Lord reigns" என்றே இப்பிரிவிலுள்ள பெரும்பாலான சங்கீதங்கள் ஆரம்பிக்கின்றன. வனாந்திர அலைச்சல்களில் தேவன் இஸ்ரவேலரின் துணையாயிருந்தார் என்ற எண்ணாகமப் புத்தகத்தின் ஒத்த கருத்துக்களை இந்த சங்கீதங்களில் பார்க்கிறோம்.

இரக்கமும் நீதியுமுள்ள தேவன், துதிக்கும் ஆராதனைக்கும் பாத்திரர் என்று பக்திவினயத்துடன் பாடப்பட்டவை இந்த சங்கீதங்கள்.

### E.ஐந்தாம் புஸ்தகம் (சங்.107-150) (உபாகம சங்கீதங்கள்)

இந்த சங்கீதங்கள் "**தேவன் நம்மிடையே உள்ளார், The Lord among us"** எனப் பாடுகின்றன. நாம் அவரைத் துதிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். அவரே நமது இரட்சகர் விடுவிக்கிறவர், எல்லாவற்றுக்கும் மேலான தேவன் என்னும் கருத்துக்கள் இப்பாடல்களில் மேலோங்கிக் காணப்படுகின்றன.

**V.சங்கீதங்களின் வகைகள்: (Classification of Psalms):** சங்கீதங்களை அவற்றின் பொருளின் அடிப்படையில் ஆராய்வதின் மூலம் தெளிவாக விளங்கிக்கொள்ள இயலும். அவற்றில் சில ஒன்றுடன் ஒன்று ஒத்தவையாக இருப்பினும், இவ்விதம் ஆராய்வது பயனளிக்கும். மொத்தமுள்ள 150 சங்கீதங்களையும் ஆறு வகைகளாகப் பகுக்கலாம்

### 1.துதியின் சங்கீதங்கள் (அல்லது) அல்லேலூயா சங்கீதங்கள் (Hymns of Praise (or) Hallal Psalms)

சங். 8,21,33,34,103-106,111-113,115-117,135,145-150 ஆகிய சங்கீதங்கள் தேவனுடைய நாமம், அவருடைய மகத்துவம், அவருடைய மேன்மை, இரட்சிப்பு ஆகியவற்றை விவரிக்கின்றன.

### 2.புலம்பலின் சங்கீதங்கள் (அல்லது) ஜெப விண்ணப்ப சங்கீதங்கள் (Lamentation Psalms (or) Prayer and Petition Songs)

இவ்வகை சங்கீதங்கள் தனிப்பட்ட மனிதன் தன் துன்பத்தில் புலம்பிப் பாடியவை. 3,4,5,6,13,43,54,67,69-70,79-80,85,86,88,90.102,141-143 ஆகிய சங்கீதங்களில் துன்பத்தில் ஏறெடுக்கும் ஜெபமும், உதவிக்காய் தேவனிடத்தில் கெஞ்சுதலும், பக்தன் தன் துன்பநிலையை விவரித்தலும் உள்ளடக்கியுள்ளன. முழுதேசமும் பஞ்சம், யுத்தம், கொள்ளைநோய் காலங்களில் புலம்பிப் பாடிய சமுதாயப் புலம்பல் பாடல்களும் இதிலடங்கும்.

### 3.நன்றி செலுத்தும் சங்கீதங்கள் (Thanksgiving songs)

இவ்வகை சங்கீதங்கள் தேவனுடைய இரட்சிப்பின் செயல்கள், அவர்தரும் விடுதலைகள், இஸ்ரவேல் தேசத்துக்கு தேவன் செய்த இரட்சிப்பு ஆகியவற்றை விவரித்துப் பாடப்பட்டவை ஆகும். சங்.18, 30, 34, 41, 66, 92, 100, 106, 116, 118, 124, 126, 136, 138 ஆகிய சங்கீதங்கள் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

### 4.ஞான போதனைகளடங்கிய சங்கீதங்கள் (Wisdom and didactic Psalms)

தேவனுடைய பார்வையில் நாம் செய்வது எது தவறு, எது சரி என்பதை கீழ்காணும் சங்கீதங்கள் போதிக்கின்றன: சங்.1,34,37, 73, 112, 119, 133. இவை **மஸ்கீல்** என்னும் போதக சங்கீதங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

### 5.மேசியாவைப் பற்றிய சங்கீதங்கள் ( Royal or Messianic Psalms)

சங்.2, 8, 16, 19- 22, 40, 41, 45, 68, 69, 72, 89, 102, 110, 118 ஆகிய சங்கீதங்கள் தங்கள் சத்துருக்களாகிய துன்மார்க்கர்மேல் வந்து பலிக்கும் என வேதாகமத்தில் சொல்லப்பட்ட நியாயத்தீர்ப்பும், சாபங்களும் வந்துசேரும்படியாகப் பாடப்பட்டவை

ஆகும். தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டே இவ்வித சங்கீதங்கள் பாடப்பட்டன.

மேற்கண்ட பிரதான வகை சங்கீதங்களைத் தவிர **“பாவ அறிக்கை செய்யும் அதிகாரங்கள்”** (சங்.78, 105, 106, 108, 114, 126, 137) **“சரித்திர சங்கீதங்கள்”** (78, 105, 106, 108) **“பொது ஆராதனைப் பாடல்கள்”**, (சங் 15, 24, 45, 68, 113-118), **“ஆரோகண சங்கீதங்கள்”**, (சங் 120-134) ஆகியவையும் வகைபிரித்து விளக்கம் காணவேண்டியவை ஆகும்.

வேதாகமத்தில் சங்கீத புஸ்தகம் மட்டுமே **‘அதிகாரங்கள்’** வாரியாகத் தொகுக்கப்படாதவைகள். கி.பி.1227-ல் வேதாகமத்திலுள்ள பெரும்பாலான புத்தகங்கள் அதிகாரங்களாகப் (அத்தியாயங்களாக) பிரிக்கப்பட்டன. சங்கீதங்களோ அவற்றின் ஆசிரியர் பெயர் வாரியாகத் தலைப்பிடப்பட்டன. 51ம் சங்கீதம் போன்றவை சங்கீதத்தின் சரித்திரப் பின்னணியத்தையும் தலைப்பாகக் கொண்டுள்ளன. சங்கீதங்கள் கவிதைகளாக அல்லது பாடல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளமையால் உதாரணமாக அவற்றை **“சங்கீதம் 23ம் அதிகாரம்”** எனக் குறிப்பிடாமல், **‘‘23ம் சங்கீதம்’’**, அல்லது **‘‘சங்கீதம் 23’’** என்று குறிப்பிடுவதுதான் சரி.

வேதாகமத்தின் பிற புத்தகங்கள் மனிதனுக்கு தேவன் சொல்லும் செய்திகளைத் தருகின்றன. ஆனால் சங்கீதப் புத்தகமோ, மனிதன் எப்படி தேவனுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதைச் சொல்லுகிறது. வேதாகமப் புத்தகங்களெல்லாம் மக்களுக்காக எழுதப்பட்டவை, ஆனால் சங்கீதங்களோ தேவனை நோக்கி மனிதன் பாடும் பாடல்களாக இருக்கின்றன. தேவனுடைய பரிசுத்தவான்கள் தங்களது எல்லா சூழ்நிலைகளிலும் எப்படிப் பேசினார் என்பதையும் சங்கீதங்களில் காண்கிறோம். எனவே, சங்கீதங்களை ஒரு பக்தனுடைய **ஆத்துமாவின் எக்ஸ்ரே அறிக்கை (Xray Report of the Soul)** என்றே சொல்லலாம். எபிரெயருடைய (இஸ்ரவேலர்) பாடல் புத்தகமாகவும், தியானப்புத்தகமாகவும் விளங்கிய சங்கீதங்கள், இன்று நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதலளிக்கும் பாடல்களாகவும் திகழ்கின்றன.

நாமும், இரவு தூங்கச் செல்லுமுன் சங்கீதப்புத்தகத்திலிருந்து குறைந்தது பத்து வசனங்களையாவது வாசித்து ஜெபித்தால் மனதில் ஆறுதலும் பக்தியும் பெருகும்.

## Portraits of Jesus in John's Gospel

The Word Of God - John 1:1-18

The Son Of Man - John 2:1-11

The Divine Teacher - John 3:1-21

The Soul Winner - John 4:1-30

The Great Physician - John 5:1-9

The Bread Of Life - John 6:22-35

The Fountain Of Living Water - John 7:37-39

The Sympathetic Saviour - John 8:1-11

The Light Of The World - John 9:1-11

The Good Shepherd - John 10:1-16

The Resurrection And The Life - John 11:18-27

The King - John 12:12-19

The Humble Servant - John 13:1-20

The Great Encourager - John 14:1-31

The True Vine - John 15:1-11

The Great Gift Giver - John 16:7-15

The Great High Priest - John 17:1-26

The Model Sufferer - John 18:1-14

The Crucified King - John 19:1-18

The Resurrected Redeemer - John 20:1-18

The Friend Of The Fallen - John 21:1-19

# நற்கிரியைகள் குறித்து வேதம் என்ன கூறுகிறது?

1. நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (எபே. 2:10).
2. நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (தீத்து 3:8).
3. நற்கிரியைகளாகிய கனிகளை கொடுக்க வேண்டும் (கொலோ. 1:10).
4. நற்கிரியைகளைச் செய்யப்பழக வேண்டும் (தீத்து 3:14).
5. நற்கிரியைகளால் நிறைந்திருக்க வேண்டும் (அப். 9:36).
6. நற்கிரியைகளைச் செய்வதற்க்குப் பக்தி வைராக்கியம் இருக்க வேண்டும் (தீத்து 2:14).
7. எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2 தீமோ. 3:17).
8. நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் (1 தீமோ 6:18).
9. நற்கிரியைகளில் ஸ்திரப்பட வேண்டும் (2 தெச. 2:17).
10. நற்கிரியைகளில் பூரணராக வேண்டும் (எபி. 13:21).
11. எந்த நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும் (2 தீமோ. 2:21; தீத்து 3:1).
12. நற்கிரியைகளில் பெருக வேண்டும் (2 கொரி. 9:8).
13. நற்கிரியைகளை செய்வதற்கு ஒருவரையொருவர் ஏவ வேண்டும் (எபி. 10:24).
14. மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெறும்படி நற்கிரியைகளைச் செய்யக்கூடாது (மத். 6:1-18).
15. தேவபக்தியுள்ள ஸ்திரீகள் நற்கிரியைகளை வெளிப்படுத்த வேண்டும் (1 தீமோ. 2:10).
16. தேவன் உங்கள் நற்கிரியைகளை நினைப்பார் (நெகே. 13:14; எபி. 6:9,10).
17. உங்கள் கிரியைகள் நியாயத்தீர்ப்பு நாளிலே வெளிப்படும் (பிரசங்கி 12:14; 2 கொரி. 5:10).

**நாம் செய்ய வேண்டிய சில நற்கிரியைகள்**

1. திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரித்தல் (யாக். 1:27; சங். 68:5; யோபு 29:13).
2. பசியாயிருப்பவர்களுக்கு போஜனங்கொடுத்தல் (மத். 25:35).
3. அந்நியர்களை உபசரித்தல் (மத். 25:35; எபி. 13:2; ரோமர் 12:13).
4. வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தல் (மத். 25:35).
5. வியாதியஸ்தர்களைச் சந்தித்தல் (மத். 25:35; லூக்கா 4:40; யாக் .5:14,15) .
6. சிறைச்சாலைகளில் இருப்பவர்களை நினைவு கூறுதல் (மத்தேயு 25:35; எபி. 10:34; 13:3).
7. ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுதல் (1 தீமோ. 6:17-19; யோபு 29:12; நீதி. 31:20).
8. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் (கலா. 6:1,2).
9. ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் (எபி. 3:12,13).
10. தேவனுடைய புண்ணியங்களை அறிவித்தல் (1 பேதுரு 2:9).

**மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5:16)**



# தலைமைத்துவம்

## (Leadership)

**Dr. L. ஜெயபாலன்**
முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி

கர்த்தர் ஒவ்வொருவரையும் தலைமைத்துவத்தில் உருவாக்குகின்றார் உபயோகப்படுத்துகின்றார். தலைமைத்துவம் வயிற்றிலிருக்கும்பொழுதே உருவாக வாய்ப்பு உண்டு. பெற்றோரின் ஆவிக்குரிய ஜீவியம், ஜெபம் போன்றவை வயிற்றில் இருக்கும் கருவிற்கு உதவியாயிருக்கும்.

### Listening to the voice of God
### கடவுளின் சத்தத்திற்கு செவிமடுத்தல்

நான் 24 வயதாயிருக்கையில் முதியவர் ஒருவர் என்னை அடிக்கடி பார்க்க வருவார். "கடவுள் பேசினார்" என்கிறீர்களே? கர்த்தர் எவ்வாறு பேசுவார்? ஒரு சபத்தின் மூலமா? அல்லது காதில் மெல்லிய சத்தத்திலா? என்று கேட்பதுண்டு. கடவுள் வேதத்தின் மூலம் பேசுவார், சொப்பனம், தரிசனம் மூலம் பேசினால் அதை வேத வாக்கியங்கள் மூலம் உறுதிப்படுத்துவார் என்றேன்.

பரிசுத்த தேவன் யோசுவாவிடம் சத்திய வேதத்தில் உள்ள வார்த்தைகளை மனதில் வைக்க வேண்டும். வாயில் பேசவேண்டும் இருதயத்தில் தியானிக்க வேண்டும் என உணர்த்தினார். இந்த நியாயப்பிரமாண புத்தகம் உனது வாயை விட்டு பிரியாதிருப்பதாக.. நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக...(யோசுவா 1: 8).

### கர்த்தரின் சித்தத்திற்கு செவிமடுத்தால் அது மிகுந்த பலனைத் தரும்
### It will bring lasting results

கடவுள் ஆபிரகாமுடன் பேசினார். அவர் சத்தம் மிகவும் நிபந்தனைகள் உள்ளனவாக இருந்தது. நீ உன் தேசத்தையும்... (குடியுரிமை) உன் இனத்தையும் (உறவுமுறை) உன் தகப்பனுடைய வீட்டையும் (சொத்துரிமை) விட்டுப் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. சந்தேகமில்லாத நம்பிக்கை கீழ்ப்படிதல் "ஆபிரகாம் தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல்" என்று வேதம் கூறுகிறது.

இன்றைய நாட்களைப் போல் சாலை வசதி, வழி காட்டிகள் வரைபடம், வாகனங்கள் ஒன்றும் இல்லாத நிலையில் கடவுளின் வார்த்தையை நம்பி சென்றதால் ஆபிரகாம், யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் தகப்பனாக மாறினான்.

### கர்த்தரின் சத்தத்திற்கு செவிமடுத்தல் உணர்வுகளையும் எதிர்த்து செல்வதாகும்
### It is to obey against one's own feelings

தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின ராஜாவாகிய ஆசாவின் தாயான மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு ஆசா விலக்கிப்போட்டு... அவளுடைய விக்கிரகத்தையும் நிர்மூலமாக்கித் தகர்த்து, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போட்டான் (2 நாளா.15:16).

இன்றைக்கு தலைவர்கள், போதகர்கள், விசுவாசிகள் என்று பாரபட்சமே இருக்கக்கூடாது. தலைவராக இருப்பவர் திட்டமிடுகிறவராகவும், செயல்படுத்து கிறவராகவும் இருக்க வேண்டும். நான் சிங்கப்பூரில் (1975) படித்த பொழுது நிர்வாக

வகுப்பில் (Management) நீ திட்டமிடத் தவறினால், தோல்வியை திட்டமிடுகிறாய். (If you fail to plan, you plan to fail) என ஆசிரியர் கூறினார். "எதிலும் நீளமாக காலை வைக்காதே" என கூறுபவர்களை பார்த்திருக்கிறேன்.

## கடவுளின் மனதை அறிந்திருத்தல்
## Knowing the mind of God

ஆண்டவர் தனிப்பட்ட ஒவ்வொருவர் மேலும் ஆர்வமாக இருக்கின்றார். தன்னுடன் நெருங்கி நடப்பவர்களை தேவன் அறிந்திருக்கின்றார். யோசேப்பு தேவனுக்கு பிரியமானவனாக இருந்தான். பெற்றோர் போதித்த யேகோவா தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான் **"அவன் ஒரு சொப்பனம் கண்டு"** (ஆதி.37 : 5) என வேதம் கூறுகிறது.

அந்நாட்களில் வேதம் கிடையாது யாக்கோபுக்கு சொப்பனத்தின் மூலம் பேசினார். யோசேப்புக்கும் அவனது இளவயதில் இவரது திட்டத்தை வெளிப்படுத்தினார். பெற்றோர் மூலம் அறிந்த ஆண்டவருக்குமுன் பக்தி உள்ளவனாக இருந்தான். தன் சகோதரர்களின் துன்மார்க்கத்தை தகப்பனுக்கு அறிவிக்கிறவனாக இருந்தான் (ஆதி.37:2). கடவுளின்மேல் பக்தியுள்ளவர்கள் பிறர் செய்கிற தவறை அவர்கள் தனியாக இருக்கையில் திருந்தும்படி சொல்லவேண்டும் இல்லையெனில் அதிகாரிகளிடம் அறிவிக்க வேண்டும். தனது பதவியை தக்கவைத்துக்கொள்ள அமைதியாக இருக்கக்கூடாது. யோசேப்பின் வாழ்க்கையில் தலைமைத்துவத்தில் வரும்முன் நடந்தவைகள்.

"(PLAN)" தேவதிட்டம் வெளிப்படுத்தப்பட்டது

(PIT) வறண்டகுழி அதன் விளைவு யோசேப்பு சகோதரர்களால் குழியில் போடப்பட்டன.

"POTIPHAR'S HOUSE" போர்த்திபார் வீடு (ஆதி.39:1) கர்த்தர் யோசேப்புடன் இருந்தார். போர்த்திபாரின் வீட்டை ஆசீர்வதித்தார்,

"PRINCIPLE" பின்பற்றவேண்டிய கடமைகள் (ஆதி.39:9). பாவத்திற்கு எதிர்த்து நின்றான். இவ்வளவு பெரிய பொல்லாப்பிற்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி?

"PRISON" கடவுளுக்கு பயந்து பொல்லாப்பிற்கு இணங்காததால் கிடைத்த பரிசு அடி, உதை, மன உளைச்சல், சிறைச்சாலை (ஆதி.39:20) கடவுள் யோசேப்புடன் இருந்தார். சொப்பனத்தின் அர்த்தம் கூறும் கிருபையை தந்தார். "உத்தமனுக்கு கர்த்தர் துணை" அக்கிரமக்காரனுக்கு சாத்தான் துணை முடிவு மரணம்.

"POLITICIANS" பார்வோனுக்கு அருகாமையில் இருந்த பானபாத்திரக்காரன், சுயம்பாகிகளின் தலைவன். அவர்கள் சொப்பனத்தின் அர்த்தத்தைக் கூறினான் (ஆதி. 40:5-8).

"PALACE" அரண்மனை சிறையிலிருந்து அரண்மனைக்கு யோசேப்பு கொண்டு செல்லப்பட்டான். பார்வோனின் சொப்பனங்களுக்கு சரியான விளக்கத்தை யோசேப்பு கூறினான் (ஆதி. 39 : 14).

"PRIME MINISTER" (முதல் மந்திரி) ஆதி.49 : 39-43 உயர்வு தேவனால் வருகின்றது. Promotion comes from the Lord கடவுள் ஒருவரை உயர்த்தவேண்டுமெனில் யாரைக் கொண்டும் செய்வார். அதேபோல கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் உயர்த்துவாராக.

## பரிசுத்த வேதாகமம்



- உலகத்திலேயே அதிகமான பேர் வாசிக்கும் புத்தகம் பரிசுத்த வேதாகமம்!
- உலகிலேயே அதிகமாக விற்பனை செய்யப்படுகிற புத்தகமும் வேதாகமமே!
- மேலும் உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம்! இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- கடந்த 2023 மார்ச் மாத கணக்கின்படி, முழு வேதாகமமும் 733 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- புதிய ஏற்பாடு மட்டும் மேலும் 1622 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- இது தவிர வேதாகம பகுதிகள் சுமார் 1255 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- இப்படி சுமார் 3610 மொழிகளில் வேதாகமத்தின் ஏதோ ஒரு பகுதி இன்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதினிமித்தம் உலகிலுள்ள சுமார் 600 கோடி பேர் வேதாகமத்தை தங்கள் சொந்த மொழிகளில் வாசிக்க முடியும்.

## ALPHABETICAL SIGNS OF CHRIST'S COMING

A - Apostasy in the Church - 2 Timothy 3:5
B - Blood and fire and pillars of smoke - Joel 2:30
C - Counterfeit Christs - Mark 13:22
D - Distress of nations - Luke 21:25
E - Earthquakes multiplying - Matthew 24:7
F - Famines – Matthew 24:7G - Greatest tribulation – Mark 13:l9
H - Hearts of Men failing for fear - Luke 21:26
I - Increase of travel and speed - Daniel 12:4
J - Judgment of pestilence - Matthew 24:7
K - Knowledge increases - 2 Timothy 3:7
L - Lawlessness spreads - 2 Timothy 3:3
M - Mockers, scoffers arise - 2 Peter 3:4
N - Noah's day revived - Matthew 24:37
O - Outpouring of the Holy Ghost - Joel 2:23
P - Portrayal of God's power - Haggai 2: 6, 7
Q - Quest for pleasure - 2 Timothy 3:4
R - Riches accumulate - James 5: 1, 2, 3
S - Spiritism doctrine grows - I Timothy 4:1
T - Turning away from the truth - 2 Timothy 4: 3, 4
U - Unprecedented wars and rumours of wars - Luke 21:9, 10
V - Vast northern power to arise - Ezekiel 38
W - Worldwide evangelism - Mark 13:10
X - Exceptional astronomical signs - Luke 21:25
Y - Young people will be disobedient to parents - 2 Timothy 3:2
Z - Zionism - restoration of the Jews to Palestine - Luke 21:29-31

- By K. A. Murch



# திருச்சபையில் நடைபெறும் கூட்டு ஆராதனையின் முக்கியத்துவம்

**Rev.V. லாரன்ஸ் மனோஜ்குமார்**
மூத்த போதகர், இவாஞ்சல் ஏ.ஜி. சர்ச், நாகமலை, மதுரை

ஆராதனை (Worship) என்கிற வார்த்தை, திருச்சபைகளிலும், கிறிஸ்தவ வட்டாரங்களிலும் பரவலாக பயன்படுத்தப்படுகின்ற வார்த்தை. இது துதி ஆராதனை (Praise and Worship), சபை ஆராதனை (Church Service) போன்ற சில அர்த்தங்களிலும் கிறிஸ்தவர்களால் புரிந்துக்கொள்ளப்படுகிறது. Worship என்ற ஆங்கில வார்த்தைக்கு ஆராதனை என்றோ வழிபாடு என்றோ தொழுகை என்றோ பொருள் கொள்ளலாம். நல்ல இசையுடனும், நல்ல பாடல்களுடனும் கர்த்தரை புகழ்ந்துபாடுவதுதான் ஆராதனை என்று கருதுபவர்கள் அநேகர் உண்டு. ஆனால், இது ஆராதனையின் ஒரு பகுதி மட்டுமே. இதைத்தான் போதகர் ரிக் வாரன் தன்னுடைய நூலில் (The Purpose Driven Life) ஆராதனை என்பது பாடலோ அல்லது இசையோ அல்ல அவைகளை எல்லாம் கடந்தது என்பதை விளக்குகிறார்.

நமது வாழ்க்கை முறையே ஒரு ஆராதனை வாழ்க்கை முறையாக இருக்கவேண்டும் என்பதை அவர் குறிப்பிடுகிறார். "Anything we do that brings pleasure to God is Worship" நாம் கர்த்தருகென்றே அவரால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (ரோமர் 11:36; கொலோ.1:16:17). நமது ஆராதனை வாழ்க்கை முறைமைதான் கர்த்தரோடு ஒரு நெருங்கிய உறவிற்குள் நம்மை தொடர்ந்து நிலைக்க வைக்கிறது.

அதேவேளையில், கர்த்தரை மனதார, வாயார துதித்து பாடி ஆராதனை செய்யும் முறைமையை வேதாகம பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் காணமுடியும். எங்கெல்லம் அவர்கள் அதனைச் செய்தார்களோ, அங்கெல்லாம் கர்த்தரின் கரத்தின் கிரியைகளை பார்க்க இயலும். இது, கர்த்தரின் ஜனங்கள் கூடி, பாடல்களுடன் வாத்தியங்களுடனும் கர்த்தரை ஆராதிப்பதன் முக்கியத்துவத்தை விளங்கப்பண்ணுகிறது. கர்த்தர் அதனை அங்கரிப்பதனாலேயே அவரது கிரியைகளை, வல்லமைகளை, மகிமையை அந்த சூழ்நிலைகளில் வெளிப்படுத்துவதை காண முடியும்.

உதாரணமாக, தகுந்த உபவாச ஆயத்தத்துடன் யோசபாத்தும் அவனது ஜனங்களும் கர்த்தரை மனதார துதித்தபோது அவர்கள் யுத்தம் செய்யாமலேயே பெரும் வெற்றியை கர்த்தர் (2 நாளாகமம் 20:1-26) தந்தார்.

பவுலும் சீலாவும் மிகவும் அடிக்கப்பட்ட நிலைமையிலும், சிறைச்சாலைக் குள்ளே ஜெபம்பண்ணி மகிழ்ச்சியோடு கர்த்தரை துதித்து பாடினபோது கர்த்தரின் கிரியைகள் அற்புதமாக வெளிப்பட்டது (அப்.16:24-33), சிறைச்சாலைக்காரனின் குடும்பம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவதற்கு அது ஏதுவாக இருந்தது. கர்த்தர் செய்த அற்புத கிரியைகளுக்காக அவரை புகழ்கிறோம். அதுவே துதி, (Praise). அவர் செய்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி கூறுகிறோம். அதுவே நன்றி செலுத்துதல் (Thanks Giving) (1தெச.5:18). அவர் சர்வ வல்லமையுடைய தேவனாக, மகா உன்னதராக, தாம் ஒருவரே நித்தியமானவராக. மகா பரிசுத்தராக இருக்கிறார். அவரை பரிசுத்தராய் அங்கீகரிப்பதனாலேயே தொழுதுகொள்கிறோம் (சங்.29:2;96:9). இவை அனைத்தும் சேர்ந்ததுதான் ஆராதனை.

மேலும் ஆராதனையை குறிக்கும் வேறு சில பதங்கள் வேதத்திலே பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக கிரேக்க மொழியில் **புரோஸ்குனியோ** என்கிற

வார்த்தையின் அர்த்தங்களில் ஒன்று. முகங்குப்புற அல்லது முழங்காலில் விழுந்து, நெற்றி தரையில் படும்படி தலைவணங்கி தலைசிறந்த கனத்தை கொடுப்பதை குறிக்கும். அது ஆராதனை (Worship) என்கிற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 61 ஆராதனை முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற இன்னும் வேறுசில வார்த்தைகள் ஆய்னியோ (Praise, to sing praises in honour to God), எப்பி ஆய்னியோ (To tell a story before and then praise by clapping hands), யூலோகியோ (நன்றாக புகழ்ந்து பேசுவது), டோக்சா (மகிமை செலுத்துவது) போன்ற ஆராதனையை குறிக்கும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேதம் தெளிவாக தேவ ஜனங்களின் கூட்டு ஆராதனைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

தேவஜனங்கள் கர்த்தருடைய சமுகத்தில் அவரை ஆராதிக்க கூடுகிறபோது எந்தெந்த விதங்களில் எல்லாம் அதை தங்கள் உணர்வுகளோடு சேர்த்து அவர்கள் வெளிப்படுத்தலாம் என்பதற்கும் சில உதாரணங்கள் வேதத்தில் நாம் காண்கிறோம்.

சந்தோஷத்துடன் (உபாகமம் 12:11,12), மகிழ்ச்சியுடன் (சங்கீதம் 100:2), கைகளை உயர்த்தி (சங்கீதம் 134:2), புதிய பாடல்களை பாடி (சங்கீதம் 33:3;96:1), பணிந்து குனிந்து முழங்கால்படியிட்டு (சங்கீதம் 95:6), கரங்களைத் தட்டி (சங்கீதம் 47:1;150:5), இசைக்கருவிகளுடன் (சங்கீதம் 33:2,3;150:4). ஆர்ப்பரிப்புடன் (யோசுவா 6:2-5), முகமலர்ச்சியுடன் (சங்கீதம் 126:2) கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

ஆராதனை வாழ்க்கைக்கு சங்கீதக்காரன் தாவீதையும் ஒரு நல்ல முன் உதாரணமாக கூறலாம். He brought in a new dimension of worship among God's people. பாடகர் குழுக்களோடும், இசைக்கருவிகளோடும் கர்த்தரை துதித்துபாடி ஆராதிக்கும் முறைமையை இஸ்ரவேல் ஜனங்கள். அதாவது, கர்த்தருடைய ஜனங்கள் நடுவில் அறிமுகப்படுத்தியவன் (1 நாளா.15:16-24;16:4-8).

இரட்சிக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்ட ஜனங்களாக கூடி வந்து திருச்சபையிலே இதைத்தான் நாம் செய்கிறோம். பலவிதங்களில் இதனை நாம் செய்கிறோம்; நம்முடைய தியாகம், கொடுத்தல், கீழ்ப்படிதல், அர்ப்பணிப்பு யாவும் கர்த்தரால் ஆராதனையாக அங்கீகரிக்கப்படுகிறது. நமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதும் புத்தியுள்ள ஆராதனை (a meaningful worship) என்று வேதம் குறிப்பிடுகின்றது. (ரோமர் 12:1). பழைய ஏற்பாட்டில் பலி செலுத்துதல் ஆராதனையாக கருதப்படுகிறதுபோல (ஓசியா 14:2) புதிய ஏற்பாட்டில் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி கூறப்பட்டுள்ளது (எபிரெயர் 13:15).

ஏற்கனவே கூறியபடி கர்த்தருடைய ஜனங்களின் இப்படிப்பட்ட ஆராதனையை, ஆராதனை முறைமைகளை கர்த்தர் அங்கீகரிக்கிறார்: தம்முடைய வல்லமையின் கிரியைகளை அவர் வெளிப்படுத்துகிறார்: கர்த்தரின் நாமம் அதில் மகிமைப் படுத்தப்படுகின்றது. தேவ ஜனங்கள் கர்த்தருடைய சமுகத்தில் மகிழ்ந்திருக்கவும். அவரது பிரசன்னத்தை அனுபவிக்கவும், துதியோடும் புகழ்ச்சியோடும் கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டு அவரை கனம் பண்ணவும் வாய்ப்பளிக்கின்றது. கர்த்தர் தமது ஜனங்களை அதனூடாக ஆசீர்வதிக்கிறார் (நாளாகமம் 16:27-29;சங்கீதம் 100).

ஆகவே கர்த்தருடைய ஜனங்கள் சபையாக கூடி வந்து ஆராதிப்பதை கண்டிப்பாக முக்கியப்படுத்த வேண்டும். இது திருச்சபை வளர்ச்சியிலும் தனிநபர் பக்திவிருத்தியிலும், கர்த்தருக்கு ஊழியம் செய்வதிலும் பெரும்பங்காற்றுவதோடு, கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

திருச்சபை மக்களாக இணைந்து மகிழ்ச்சியுடன் கர்த்தரை ஆராதிப்போமாக!



# யாரை நான் அனுப்புவேன்?

**Rev.A.எட்வின் பிரபாகரர்**
இயக்குநர் - தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன்

TAMIL DISTRICT MISSIONS
*India and beyond...*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் மிஷன் இலாக்கா மூலம் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக! இதுவரை நமது மிஷன் ஊழியத்தை ஜெபத்தினால், பொருளாதாரத்தினால், ஈடுபட்டு வேலை செய்வதினால் தாங்கி வருகிற போதகர்கள், விசுவாச மக்கள் அனைவருக்கும் மிக்க நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான்**

ஏசாயா 6:8-ல் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் பேசின தேவன் இக்கடைசிக் காலத்திலும் நம்மோடு பேசி உணர்த்தும் காரியமாய் பாரப்பட, ஜெபிக்க, செயல்பட தேவன் நம் ஒவ்வொருவருக்கும் உதவிச்செய்வாராக!

**எது தேவனின் காரியம்!**

ஆண்டவர் இயேசு இவ்வுலகில் இரட்சகராய் வந்து மீட்பின் வேலையை முடித்து பரமேறி போவதற்கு முன் இப்படி தமது இதயபாரத்தை வெளிப்படுத்தினார். நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி... அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று உரைத்தார். மத்.28:19,20 ராஜ்யத்தின் சுவிஷேத்தை அறிவித்து சீஷராக்குவதே தேவனின் காரியமாகும். பவுல் அப்போஸ்தலனும் 1 தீமோ. 2:4-ல் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று எழுதியிருக்கிறார். அன்பு வாசகரே! தேவனின் காரியம் என்பது எல்லாரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசித்து ஆத்தும இரட்சிப்பை பெறுவதாகும். இந்தியாவில் 143 கோடி ஜனங்களும் ஆண்டவரை விசுவாசிக்கும் வரை அயராது தேவனின் காரியத்தை, சுவிஷேசத்தை அறிவிக்க தேவன் சபையிடம் எதிர்பார்க்கிறார். சபையை தேவன் வைத்திருப்பதின் பிரதான நோக்கம் மிஷன் பணியை, சுவிசேஷ பணியை செய்வதற்காகத்தானே.

**தேவகாரியமாய் போக முன்வருவோருக்காக காத்திருக்கும் தேவன்**

ஏசாயா 6:8-ன் படி யார் நமது காரியமாய் போவான் என்பது தம்முடையவர்கள் முன்வர தேவன் எதிர்பார்க்கிறார் என்பதையே சுட்டிக்காட்டுகிறார். நம் தேவனுக்காக முன்வருவீர்களா? தேசத்தை சுவிசேஷ மயமாக்க இலட்சங்கள் தேவனுக்காக எழும்பியாக வேண்டும். இது தேவனின் அவசரம், அவசியம் என்று உணர்ந்து நீங்கள் அர்ப்பணிப்போராக இருப்பீர்களா? முன்வருவோருக்காக எதிர்பார்த்து காத்திருக்கும் தேவனுக்கு நான் இருக்கிறேன் என்று சொல்லி அர்ப்பணிப்பீர்களா! சவுல் சந்திக்கப்பட்ட பின்பு அப்போ 9:6இல் உடனே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று தேவசித்தத்திற்கு உடனே அர்ப்பணித்து, அப்.9:20-ல் தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்து, எழும்பி தேசமெங்கும் ஊடுருவிச்சென்று, தேவசித்தத்தின்படி தேவகாரியமாய் சுவிசேஷம் அறிவித்தது போல நீங்களும் அறிவிப்பீர்களா? தேவன் நம்மைக் கொண்டு பெரிய இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.

## தேவகாரியமாய் அனுப்பும் தேவன்

யாரை நான் அனுப்புவேன்? என்று இயேசுவின் அறைகூவல், இன்று வாசகரே, உங்களிடம் பதில் கூற எதிர்ப்பார்க்கிறார் அன்று ஏசாயா தீர்க்கதரிசி 'இதோ அடியேன், என்னை அனுப்பும்' என்று உடனே அர்ப்பணித்தானே? உங்கள் பதில் என்ன? இந்தியா பெரிய தேசம், பெரிய வேலை எஞ்சியிருக்கிறது. தமது அன்பை ருசித்து, அனுபவித்த, மீட்கப்பட்டோரை தான் தேவன் எதிர்ப்பார்க்கிறார். அர்ப்பணிப்பீர்களா?

ரோமர்10:15-ல் அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று வேதம் சொல்லுகிறதே! அன்பு வாசகரே! பிரசங்கிக்கிறவர்கள் இல்லாவிட்டால் தேச ஜனம் எப்படி கேள்விப்படுவார்கள்? கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்? (ரோமர் 10:14). இன்றே அர்ப்பணிப்பீர்களா? தேசம் முழுவதும் உங்களை தமது கரத்தில் எடுத்து வல்லமையாய் பயன்படுத்த இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார். பெரிய இரட்சிப்பும், எழுப்புதலும் உண்டாகும். கர்த்தர் உங்களையும் கனப்படுத்துவார். ஆமென். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!! ஜெபியுங்கள்!!!**

1. நாம் தாங்கும் மிஷனெரி குடும்பங்களின் பாதுகாப்பிற்காக, தேவன் அவர்களை வல்லமையாய் பயன்படுத்த.
2. மிஷனெரிகள் மூலமாக திரளான ஆத்தும இரட்சிப்பும், அற்புத அடையாளங்களும் நடைபெற.
3. எல்லா இடங்களிலும் இடங்கள் வாங்கப்பட, ஆராதனை கூடாரங்கள் எழும்ப.
4. தமிழ்பிரதேச சபைகளில் இருந்து இன்னும் திரளாய் மிஷனெரிகள் எழும்ப, தாங்கும் நபர்கள் எழும்ப.
5. வட மாநிலங்களில் கிராமங்கள், பட்டணங்கள், தாலுகாக்கள், மாவட்டங்களில் திரளாய் சபைகள் எழும்ப.
6. மிஷனெரி பயணங்கள் ஆசீர்வாதமாய் அமைய.
7. தேசம் மிகப்பெரிய எழுப்புதலையும், இரட்சிப்பையும் காண.

---

### பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# வெற்றிபெறும் புருஷர்


## Rev.N. ஜான்சன்

பொருளாளர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்


எகிப்தில் 430 வருடங்கள் அடிமையாயிருந்த இஸ்ரவேலர் தேவனால் மீட்கப்பட்டு, மோசேயின் தலைமையில் கானானை நோக்கி உற்சாகமாய் புறப்பட்டார்கள். ஆனால் வழியில் சந்தித்த பாடுகள், எதிர்ப்புகள், குறைவுகள் அவர்களை முறுமுறுக்கச் செய்தன. தேவன் வாக்களித்த கானானை நோக்கிக் கால்கள் நடந்தாலும் உள்ளமோ எகிப்தையும், அதின் பாவசந்தோஷத்தையுமே நாடியது. தேவகிருபையை அலட்சியம் செய்து அவர்கள் 10 முறை தேவனை பரீட்சை பார்த்ததின் நிமித்தம் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிய நேரிட்டது.

மோசேவுக்கு பின் தேவன் யோசுவாவின் தலைமையில் ஜனங்களை யோர்தான் நதியைக் கடக்கச் செய்து கில்கால் என்கிற இடத்திலே அவர்களை சேர்க்கிறார். இந்த கில்காலில் தேவன் அருளிய வாக்குத்தத்தமே, ...இன்று எகிப்தின் நிந்தையை உங்கள்மேல் இராதபடிக்குப் புரட்டிப்போட்டேன்... (யோசுவா 5:9). கில்கால் என்ற எபிரேயப் பதத்திற்கு அர்த்தம் சக்கரம், வட்டம் அல்லது உருட்டுதல். நம் வாழ்க்கைச் சக்கரம் கர்த்தரை மையமாக வைத்து வட்டமிடும்போது பிசாசு கொண்டுவரும் நிந்தைகள், பாடுகள், வேதனைகள், கண்ணீர்கள், அவமானங்கள், சோர்வுகள் யாவும் உருட்டித் தள்ளப்படும்.

இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தவுடன் கானான் தேசத்தில் கால்வைத்த முதல் இடம் இந்தக் கில்கால். சத்துருக்களை நிர்மூலமாக, போருக்கு திட்டமிட, பதிவிருக்க, பின்பு இளைப்பாற கில்காலையே இராணுவ தலைமையகமாக பயன்படுத்தினர். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் இளைப்பாறும் அல்லது காத்திருக்கும் அனுபவத்தை இந்த கில்கால் குறிக்கிறது. நம்மோடு இடைவிடாமல் போராடும் சாத்தானை போரிட்டு மேற்கொள்ளும் பெலனைப் பெற கர்த்தரின் பாதத்தில் காத்திருந்து ஜெபிக்கிற அனுபவம் அவசியம்.

இஸ்ரவேலர் இந்தக் கில்காலில் பின்வரும் ஆறு முக்கியமான அனுபவங்களை சந்தித்தனர். பின்வரும் இந்த அனுபவங்களை நாம் கடந்துவரும்போது வெற்றிபெறும் புருஷராக மாறமுடியும்

### 1. பாவத்துக்கு மரிக்கும் புருஷராக வேண்டும்

இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தவுடன் கர்த்தர் கூறியபடியே, 12 கற்களை எடுத்து கில்காலிலே யோசுவா நாட்டினார் (யோசுவா 4:20). யோர்தான் என்றால் இறங்குகிறதென்று பொருள். இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடக்கிற நிகழ்ச்சி கிறிஸ்தவர்கள் பாவ மரணத்திற்குள் இறங்கி கடக்கிற அனுபவத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கிறிஸ்துவுக்காக பாவத்திற்கு மரிக்காவிட்டால், ஒருக்காலும் வெற்றியுள்ள பரிசுத்த வாழ்க்கை வாழமுடியாது. சிலுவையில் கிறிஸ்து மட்டுமல்ல நாமும் அவரோடு மரித்துவிட்டோம். (ரோமர் 6:4). கிறிஸ்துவோடு ஆவியில் மரித்தவன்

பாவம் செய்யமாட்டான். ஆசை இச்சைகளுக்கு இடம் கொடுக்கமாட்டான். தன்னலம், தற்புகழ்ச்சி, வீண் பெருமை கொள்ளமாட்டான். தன் சுய விருப்பத்தை அல்ல தேவசித்தத்தை மட்டுமே நிறைவேற்றுவான்.

## 2. கிறிஸ்துவுக்காகப் பிழைக்கும் புருஷராக வேண்டும்

யோர்தான் நதியில் இறங்கிய இஸ்ரவேலர் மூழ்கிவிடவில்லை. யோர்தானால் இழுத்துச் செல்லப்படவில்லை. மாறாக யோர்தான் அவர்களைப் பார்த்து விலகி ஓடியது. யோர்தானை வெற்றிக்கொண்டு கானானில் கால்வைத்தனர். கில்காலிலே எகிப்தின் நிந்தை உருட்டித் தள்ளப்பட்டது (யோசுவா 5:9).

கீழ்படியாமை, அவிசுவாசம், மாம்ச இச்சை, தோல்வி, பாவ வாழ்க்கை வாழும் எந்த விசுவாசியும் கிறிஸ்துவுக்கு நிந்தையாகவே இருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவுடனே கூட பாவ வாழ்க்கைக்கு யோர்தானில் மரித்து கில்கால் எனும் உயிர்தெழுதலின் கரை சேரவேண்டும். அப்பொழுது கிறிஸ்துவோடு நாம் உன்னதத்தில் அமர்த்தப்படுவோம் (எபேசியர் 2:5-7).

## 3. இச்சையை அழிக்கும் புருஷராக வேண்டும்

கில்காலிலே கர்த்தர் யோசுவாவிடம் விருத்தசேதனம் பண்ணப்படாத இஸ்ரவேலருக்கு வனாந்திரத்தில் பிறந்த இந்த புதிய சந்ததிக்கு விருத்தசேதனம் செய்யும்படி கட்டளையிடுகிறார் (யோசுவா 5:2). கர்த்தர் ஆபிரகாமுக்கு பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை உன் சந்ததிக்கு தருவேன் (ஆதி.17:10-15) என்றளித்த வாக்குத்தத்தின் உறுதிப்பத்திரமாக விருத்தசேதனம் விளங்குகிறது. கானானின் ஆசீர்வாதம் மாம்ச பெலத்தினால் அல்ல, தேவ பலத்தினாலேயே என்பதை இது குறிக்கிறது.

நுனித்தோலின் மாம்சம் வெட்டி வீசப்படவேண்டும். பிசாசை மேற்கொள்ள துறக்கவேண்டிய பாவச்செயல்கள் உண்டு. மாம்ச சிந்தை ஒழியவேண்டும் (கொலோ.2:10,11). ஆதலால் விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையாகிய பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள் என்று பவுல் அறைகூவல் விடுகிறார். பரிசுத்தம் இல்லாமல் பரலோகம் இல்லை என்பதை மறக்கக்கூடாது.

## 4. மனதை புதுப்பிக்கும் புருஷராக வேண்டும்

இஸ்ரவேலர் கில்காலில் பாளயமிறங்கிய மாதத்தின் 14ம் தேதியில் பஸ்காவை ஆசரித்தார்கள் (யோசுவா 5:10). வனாந்திரத்தில் 40 வருடமாக அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவில்லை, ஏனெனில் விருத்தசேதனம் பெறாதவர்கள் அதை புசிக்கக்கூடாது.

பஸ்கா ஆட்டுக்குட்டியை புசிப்பது தேவனோடு ஒரு ஐக்கியம், நெருங்கிய உறவு ஏற்படுத்துவதை குறிக்கிறது. அவரோடு ஐக்கியம் கொள்ளும்போது நாம் புதுப்பிக்கப்படுகிறோம். புதுபெலன் பெறுகிறோம். புத்துயிர் அடைகிறோம். அவருக்காக வாழ கிருபை பெறுகிறோம். நாம் ஜீவஅப்பமாகிய கிறிஸ்துவை உட்கொள்ளாவிட்டால் ஆத்துமா பெலனிழந்து, மெலிந்துவிடும். பின்பு சாத்தானை ஜெயிப்பது முடியாததாகிவிடும்.

இயேசுகிறிஸ்து உன் இதயத்தில் பொங்கி வழிய வேண்டும். அவரின் ஜீவநதி உன் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்க வேண்டும். மனம் அவரையே சுற்றிவர வேண்டும். நாவு அவர் புகழையே சொல்லவேண்டும். அப்பொழுது உங்கள் மனம் புதிதாகும். மனம் புதிதாகும்போது வாழ்வு மறுரூபமாகும். (ரோமர் 12:1-2).

### 5. திடஉணவைப் புசிக்கும் புருஷராக வேண்டும்

இஸ்ரவேலர் பஸ்காவை புசித்த அன்றே தேசத்தின் தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பத்தையும், சுட்டகதிர்களையும் புசித்தார்கள் மறுநாளிலிருந்து மன்னா பெய்வது நின்றது. (யோசுவா 5:11-12) மன்னா என்பது மென்மையான ஆகாரம். வனாந்திரத்தில் தம் பிள்ளைகளைப் போஷிக்க தேவன் மன்னாவைக் கொடுத்தார்.

நம் வாழ்க்கைப் பயணத்திலும், வனாந்திரம் போன்ற கஷ்டங்கள், பாடுகள், சோதனை வேளைகளில், நம்மை உற்சாகப்படுத்தும், உணர்ச்சிவசப்படவைக்கும் பிரசங்கங்கள் அவசியமே. ஆனால் கானானில் பிரவேசித்தப்பின், அந்தகார லோகாதிபதிகளை எதிர்த்துப் போராட திட உணவு தானியஉணவு அவசியம்.

திடஉணவு என்பது நம் ஆத்துமாவை பெலப்படுத்தக்கூடிய, நம் சுபாவங்களை கிறிஸ்துவைப்போல மாற்றக்கூடிய, கிறிஸ்துவுக்காக ஜீவனையும் அர்ப்பணிக்கச் செய்கிற, தேவனோடு ஆழ்ந்த உறவுகொள்ளச் செய்கிற தேவவார்த்தைகள். ஆனால் பரிதாபம் இன்று அநேகர் சரீர நன்மைகளையும், உலக ஆசீர்வாதங்களையும் போதிக்கும் பிரசங்கங்களையே விரும்புகின்றனர். பாவத்தைக் கண்டிக்கும், சுபாவங்களை மாற்றும், பக்தி விருத்தி உண்டாக்கும் ஆவிக்குரிய நன்மைகளைக் குறித்து பிரசங்கிக்கும் பிரசங்கிகளை விரும்புவதில்லை, நீ பிசாசோடு போரிட்டு வெல்ல உனக்கு திட உணவு அவசியம்.

### 6. தேவவெளிப்பாட்டைப் பெரும் புருஷராக வேண்டும்

தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தாமல் நாம் அவரைக் காணமுடியாது. அவருடைய வெளிபாடு இல்லாமல், வழி நடத்துதல் இல்லாமல் நாம் யுத்தத்துக்கு புறப்படுவது வீண். இஸ்ரவேல் போருக்கு எழும் முன்பு சேனைகளின் கர்த்தர் தாம் அவர்களோடு இருப்பதை வெளிப்படுத்துகிறார் (யோசுவா 5:13-15). பகைவரின் கூட்டத்தோடு ஒப்பிடும்போது இஸ்ரவேலர் ஒரு சிறுகூட்டம். எனவே மனித பெலத்தினால் கானானியரை மேற்கொள்ள முடியாது. பரம சேனையின் உதவியால் மட்டுமே பாதாளத்தின் சேனைகளை பரிகரிக்க முடியும். சர்வ வல்லவரே இஸ்ரவேலரின் சேனைக்கு தலைமை தாங்க வேண்டும். ஏனெனில் யுத்தம் கர்த்தருடையது (யாத்.14:14).

ஆவிக்குரிய சத்துருவை ஆவிக்குரிய ஆயுதங்களால் மட்டுமே தாக்கமுடியும். அசுத்த ஆவிகளை பரிசுத்தாவியானவரால் மட்டுமே வெல்லமுடியும். ஆவியானவரின் கரத்தில் நம்மை அர்ப்பணிப்போம்.

கர்த்தரின் வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கும்போது, பாதாளத்தின் வாசல்கள் நம்மையும் சபையையும் ஒருபோதும் மேற்கொள்ளுவது இல்லை (மத்தேயு 16:18). சபையின் தலையாகிய கிறிஸ்துவை உங்கள் குடும்பத்தின் தலைவராக வைக்கும்போது, சத்துருவின் நிந்தைகள் உங்கள்மேல் இராதபடிக்கு அவைகளை உருட்டித் தள்ளுவார். நிச்சயம் உங்களை வெற்றிபெறும் புருஷராக மாற்றுவார்.ஆமென்!



# Steps to Develop Self-confidence

## தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான படிகள்

**Rev.J.JOSHUA**

Treasurer - Students for Christ Ministry

கிறிஸ்துவில் அன்பான மாணவ மாணவிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இன்றைக்கு அநேக மாணவ மாணவிகள் தன்னம்பிக்கை அற்றவர்களாக இருக்கிறார்கள். இதனால் மாணவர்களுடைய வாழ்க்கை மிகவும் பின்னடைவில் (படிக்கச் முடியாமல், வேலைக்கு செல்லாமல், எந்த ஒரு காரியம் நான் செய்தால் அதில் பலன் இல்லை என்ற எண்ணம்) இருக்கிறது. இப்படி தன்னம்பிக்கையற்ற மாணவர்கள் தங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள சில படிகள்.

### HOW CAN YOU BECOME CONFIDENT?

### நீங்கள் எப்படி தைரியமும் தன்னம்பிக்கை உள்ளவர்களாக இருக்க முடியும்?

### 1. ESTABLISH YOUR WORTH ACCORDING TO GOD'S VALUE SYSTEM

“தேவனுடைய மதிப்பீட்டில் உங்கள் நம்பிக்கையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்”.

“தேவனுடைய மதிப்பீட்டை புரிந்து அதோடு உங்களை இணைத்து கொள்ள வேண்டும்”.

**God's Value System**-த்தை புரிந்துக்கொள்ள முதலாவது நாம் தேவனுடைய பார்வையில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் இருக்கிறோம் என்பதை நினைவுகூர வேண்டும். ஆதியாகமம் 1:26-ல் பார்க்கிறோம். நம்மை அவர் சாயலில் சிருஷ்டித்திருக்கிறார், ஏன் சிருஷ்டித்திருக்கிறார்? "To Reflect the Image of God and to stand as a representative to Rule" (ஆதி.1:27,28) ஆனால் தேவன் கொடுத்த மதிப்பீட்டை புரிந்துகொள்ளாமல் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கபட்ட நாம் கீழ்ப்படியாமையின் நிமித்தம் சாயலை இழந்தோம், ஆனால் தேவன் நம்மை அப்படியே விட்டுவிடாமல் அவரையே நமக்காக தந்தருளி நம் பாவத்துக்காக அவர் மரித்து மீண்டும் அவருடைய மகிமையின் சாயலை நமக்கு கொடுத்து இருக்கிறார். **“நம்மை வாழவைக்க தனது ஒரே மகனை மரிக்க அனுமதித்தார்; நம்மை எவ்வளவு உயர்வாக நினைக்கிறார்”** என்பதை அறிந்து கொள்ள முடியும். இது போல நமக்காக தேவன் வைத்திருக்கும் மதிப்பீட்டை வேதத்தில் கண்டுபிடித்து நாம் வாழ வேண்டும். அப்படி வாழ்வதற்கு, **Establish Your Confidence.** நமக்காக தேவன் செய்த கிரியைகளில் நம்மை வைத்து பார்க்கும்போதுதான், நம்மை குறித்த நம்பிக்கை அதிகமாகிறது. Eg: எபி.2:7 “உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்” யோவான் 1:12 “தேவனுடைய பிள்ளை”.

### 2. FOCUS ON GOD, AND NOT ON YOUR SITUATION

தேவன் மீதே நமது கண்களை பதித்திருக்க வேண்டும். “நமது சூழ்நிலையின் மீது அல்ல. சங்கீதம் 27:1-3: இந்த வசனத்தில் இருந்து மூன்று காரியங்கள் புரிந்துக்கொள்ள முடியும்”.

### பிரச்சனையின் மத்தியில் பிறப்பது தான் நம்பிக்கை

**i).** பிரச்சனைகளே இல்லாத நிலையில் பிறப்பது தான் நம்பிக்கை என்பது சரியானது இல்லை.

"தாவீது அநேக பிரச்சனைகளையும் கஷ்டங்களையும் சந்தித்து வந்தான் என்பது தெளிவாகிறது. தாவீதுடைய பகைவர்கள், எதிராளிகள் கர்த்தருக்கு (சிலருக்கு) விரோதமாக பாளையம் இறங்கும் ஒரு கூட்ட மக்களை குறிப்பிடுகிறார்".

**ii).** நமது பிரச்சனை மத்தியில் தேவனை பற்றிக்கொள்ளும்போது தான் நம்பிக்கை பிறக்கிறது.

"தாவீது தனது கடினமான சூழ்நிலையில் தனது பார்வையை தேவன் மீது மட்டும் பதித்து வைத்திருந்தான்; கர்த்தர் என் ஜீவனின் அரணானவர்" (வச.1).

**iii).** நேற்று தேவன் தந்த வெற்றிகள் இன்றைக்கு எதிர்கொள்ள வேண்டிய நம்பிக்கையை தருகிறது.

சங்கீதம் 27-2 "பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள். "நேற்றைய அனுபவத்தை சொல்லுகிறார்". வசனம்-3 "எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது". நேற்றைய வெற்றியின் பின்தான் இன்றைய நம்பிக்கை.

### 3. DEVELOP FRIENDSHIP WITH CONFIDENT PEOPLE

நம்பிக்கை மிகுந்த மக்களுடன் நட்புறவு வளர்த்துக்கொள்ளுங்கள்.

"நம்பிக்கையை நம்மில் வளர்த்துக்கொள்ள நம்பிக்கை மிகுந்த மக்களுடன் நல்ல உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்" 1 சாமுவேல் 14:7. "உங்களுக்கு தன்னம்பிக்கை தைரியம் வர வேண்டும் என்றால், உன்னை சுற்றிலும் நம்பிக்கை கொண்ட மக்கள் இருக்க வேண்டும். அவர்கள் உன்னை ஊக்குவிக்கிறவர்களாக (Encourage) இருக்க வேண்டும்".

### 4. PUT FEW WINS UNDER YOUR BELT

கடந்த கால வெற்றிகள் உனக்கு அரைக்கட்டாக வைத்துக்கொள்.

'நீங்கள் பெற்ற சிறு சிறு வெற்றிகளை எப்போதும் தயாராக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்". அப்படிப்பட்ட காரியங்கள் முதலில் சின்ன சின்ன காரியங்களை சமாளிக்க அல்லது சவாலாக எடுத்துக்கொள்ள உதவி செய்யும். பிறகு பெரிய பெரிய காரியங்களை சவலாக எடுத்துக் கொள்வீர்கள். சின்ன அளவில் செய்ததது எல்லாம் இன்றைக்கு பெரிய அளவில் செய்ய தேவன் மாற்றியிருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். "கடந்த கால சின்ன வெற்றிகளை உன் மனதில் வைத்துக்கொள்ளும்போது அது உனது திறமையை விரிவுபடுத்த துணையாக இருக்கும்". சின்ன சின்ன காரியங்களை யார் ஒருவர் செய்து முடிக்கும் போதும் நம்பிக்கை என்னும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளும் முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கும் கற்று கொடுக்க முடியும். "The Value of developing a confident attitude." கடந்தகால வெற்றிகளை குறித்து தேவனுக்கு மகிமையை கொடுக்க வேண்டும்.

### வேதாகம உதாரணம்

1. தேவனை மகிமைப்படுத்தாத சவுல் முழு தோல்வி அடைந்தான்.
2. தேவனை மகிமைப்படுத்திய தாவீது பெரிய வெற்றி அடைந்தான்.

**சவுல், தாவீது ஒற்றுமைகள்**

1. இருவரும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்.
2. தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்.
3. பெலிஸ்தியர்கள் எதிராக வந்தபோது தலைவர்களாக இருந்தவர்கள்.

**சவுல், தாவீது வேற்றுமைகள்**

1. **சவுல்** தனது சொந்த பெலத்தையே சார்ந்து வாழ்ந்தான். யுத்தத்திற்கு சென்றபோது தேவனை சார்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாதவன். தோல்வி அடைந்தான்.

**தாவீது** எப்போதும் தேவனையே சார்ந்து வாழ்ந்தான். யுத்தத்திற்கு போகும்போது எல்லாம் தெய்வீக பலத்தை நாடி சார்ந்து கொண்டான். வெற்றி அடைந்தான்.

2. **சவுல்** தேவனை விட்டு விலகி சென்றது தோல்விக்கு வழி நடத்தியது. ஆனால் கர்த்தர் தன்னை விட்டு விலகியதை அவன் அறியவில்லை.

**தாவீது** சொன்னான் "என்னை சிங்கத்துக்கும், கரடிக்கும் தப்புவித்த தேவன் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்".

சவுல் தனது தலைமை பொறுப்பை இழந்தது, தாவீதுக்கு தலைமை பொறுப்பேற்க வழியை கொடுத்தது. கடந்த கால வெற்றி பட்டியல் (Victory Lists) நமக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டுமே தவிர மிஞ்சின நம்பிக்கையைத் கொடுத்து விடக்கூடாது. Victory lists should give us confidence, not the over confidence.

**5. FIND ONE GOOD TALENT IN YOU AND THEN SPECIALIZE THAT UNTIL YOU BECOME SPECIAL IN THAT**

உனக்குள் இருக்கிற நல்ல திறமையை கண்டுப்பிடித்து அதில் சிறந்திருக்கும்படி அதை விசேஷமானதாக்கிக் கொள். "உன்னை பிறருடன் ஒப்பிடுவதை தவிர்த்துக்கொள் (Quit comparing yourself with others.)" மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டு பார்த்தால் உங்கள் தன்னம்பிக்கை குறைந்து கொண்டே போய்விடும். உனக்கு எதில் திறமையிருக்கிறதோ அதை மட்டும் கண்டுபிடித்து, அதில் விசேஷித்த சிறப்புப் பெறும்வரை அதை விசேஷமானதாக மாற்றிக்கொள். (ஒரு குறிப்பிட்ட வேலை, இயற்கையான திறமைகள், தாலந்து...)

"உங்களால் முடிந்த அளவு தேவன் உங்களுக்கு கொடுத்த பெலனை பயன்படுத்துங்கள். சிறப்பான நபராக வருவீர்கள்".

**முடிவுரை**

எந்த ஒரு சூழ்நிலையும் சாதகமாக இருக்கும்போது மட்டுமல்ல, சாதகமற்ற சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையுள்ளவர்கள் எந்த ஒரு காரியத்தையும் சிறப்பானதாக மாற்றிக்கொண்டு, அந்த காரியத்தை வெற்றியுள்ளதாக மாற்றி விடுவார்கள். தங்கள் தன்னம்பிக்கையைத் தங்கள் மீது மட்டும் வைக்காமல் அந்த தன்னம்பிக்கையைத் தந்த தேவன் மேல் வைத்து, சிறப்பானதாய் மாற்றுவார்கள். அது போல உனக்குள் தேவன் தந்திருக்கிற தாலந்துகளை, வரங்களை சிறப்பானதாக்கிக்கொள்ள தன்னம்பிக்கையைத் அதிகம் வளர்த்துக் கொள். கர்த்தர் உன்னை சிறப்பான நபராய் மாற்றுவார்.



# நேரமும், வாலிபரும்


Rev. D. சாலமோன்

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்


## Time Management : நேர மேலான்மை

(நேரத்தை குறித்த வேத போதனையும் அதன் முக்கியத்துவத்துவமும்), ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், கிறிஸ்துவின் ஸ்தானிகர்-CA ஊழியங்களின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த உலகில் வாழும் அனைவருக்கும் ஆண்டவராகிய தேவன் பொதுவான பரிசாக நேரத்தை கொடுத்துள்ளார். பரிசுத்த வேதாகமம் போதிக்கும் போதனைகளில் ' நேர மேலான்மை ' முக்கிய இடம் வகிக்கிறது.

## Definiton of Time: நேரத்தின் அர்த்தம்

சிருஷ்டிப்பின் காலத்திலே தேவனால் நேரம் வகைப்படுத்தப்பட்டது. நேரம் என்பது, நொடி, நிமிடம், மணி, நாள், வாரம், வருடம் ஆகிய அளவுகளால் அறியப்படுகிறது. கடந்த காலம், நிகழ் காலம், பருவ நிலை காலங்கள், குறிப்புகள் (பிரசங்கி 3: 1-8)-ல் கூறப்பட்டுள்ளது.

நேரம் எவருக்கும் காத்திருப்பதில்லை, ஒருவரின் வாழ்க்கையின் நேர்மை, நாணயம், தரத்தை நிர்ணயம் செய்யக் கூடியதாக இருக்கிறது. தேவன் உன்னில் எதிர்ப்பார்க்கும் உன்னத நிலையை அடைவதற்கு நேரம் உனக்கு மிகவும் உதவுகிறது.

மரணம் மட்டுமே மனிதனை 'நேரத்தில்' இருந்து விடுவிக்க முடியும். எபிரெயர் 1:1-2 வசனங்களில் நமது தேவனாகிய கர்த்தர் ஒரு தலை சிறந்த 'நேர மேலாளர்' என்பதை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, சரியான இடத்தில், சரியான நேரத்தில் மனிதனை பூமியில் கொண்டு வருவதில் சிறந்தவர் என்பதன் மூலம் அறியலாம்.

## Three Dimensions of Time / நேரத்தின் மூன்று பரிமாணங்கள்

### 1. The Preciousness of Time - நேரத்தின் மதிப்பு

வாலிபரே! தேவன் உனக்கு கொடுத்திருக்கும் பல ஆசீர்வாதங்களில் பிரதானமானது 'நேரம்'. நீ யாராக இருக்கிறாய், எப்படிப்பட்டவராக மாறப்போகிறாய் என்பது நீ நேரத்தை எப்படி பயன்படுத்துகிறாய் என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. நேரம் விலையேறப்பட்டதாய் தேவன் நியமித்திருக்க, சத்துருவாகிய பிசாசு நேரத்தை துர்பிரயோகம் செய்யவும், வீணாக செலவு செய்யவும் உன்னை வஞ்சிக்கிறான். இன்றைய காலகட்டத்தில் மனிதனின் சரீரத்தின் ஒரு உறுப்பு போல் மாறி விட்ட கைபேசி, நேரத்தை கட்டுப்படுத்தும் காரணியாக மாறிவிட்டது. சமூக வலைதளங்களில் அளவுக்கு அதிகமான திரை நேரத்தால் (Screen time) உனது நேரம் திருடப்படுகிறது.

நேரத்திற்கும் நீ ஆண்டவரிடம் கணக்கு கொடுக்க வேண்டும். You are 'stewards' of Time. ஒவ்வொரு மணி நேரமும், நாளையும் நீ பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். அதனை உணர்ந்த மோசே கர்த்தரிடம் (சங்கீதம் 90:12) நாட்களைக் குறித்த அறிவுக்காக ஜெபிக்கிறார். காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபே.5:16).

## 2.The Power of Time- நேரத்தின் ஆற்றல்

பிரியமானவர்களே! நேரத்தின் உதவி இல்லாமல் எதையும் செய்ய இயலாது. உன்னுடைய அனைத்து செயல்களிலும் நேரம் முக்கிய இடம் வகிக்கிறது. History involves Time. நேரம் ஒரு செயலின் உண்மைத் தன்மையை நிரூபிக்கிறது.

தாவீது இராஜா வாலிபனாக இருந்தபோது தனது தகப்பனின் ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பனாக இருந்தார். ஓய்வில்லா வேளையிலும் தன்னுடைய நேரத்தை வீணடிக்காமல் இசைக்கருவிகளை வாசிக்கவும், சங்கீதங்களை பாடவும், கவண் எறியவும் தனது நேரத்தை ஆற்றல்மிக்கதாய் பயன்படுத்தினார். தலை சிறந்த தலைவனாகவும் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகவும் மாறினார்.

## 3.The Priority of Time - நேரத்தின் முன்னுரிமை

உன்னுடைய வாழ்க்கையில் நீ முன்னுரிமை கொடுக்க வேண்டிய முதல் இடத்தில் தேவனுடைய இராஜ்யம் இருக்கிறது. (மத்தேயு 6:33). ஒவ்வொரு நாளிலும் முதலாவது பேசுவது தேவனிடம், முதலாவது வாசிப்பது வேதம், முதலாவது கொடுப்பது தேவனுக்கு, வாரத்தின் முதல் நாள் ஆலயத்தில் போன்ற ஒழுக்கங்களால் எனது நேரத்தின் முன்னுரிமையை ஒழுங்குபடுத்தலாம்.

உனது முன்னுரிமைகளே உன்னை உற்பத்தித்திறன் மிக்கவர்களாய் மாற்றுகிறது.Productivity=Priority+Purpose+Desire.

தீமோ.1:4 நல்ல போர்ச்சேவகன் தன் மேலதிகாரியின் விருப்பம் எதுவோ அதில் மட்டுமே கவனம் செலுத்துவான்.

### 10 keys For Prioritizing Time
### நேரத்தின் முன்னுரிமைக் குறித்து 10 திறவுகோல்கள்

1. அனுதின திட்டத்தை வகையறுக்க வேண்டும்
   Document a plan.
2. அவசியம் எது, முக்கியம் எது என்று அடையாளம் காண வேண்டும் (எ.கா). தேவன், சரீர ஆரோக்கியம், குடும்பம், சபை, ஊழியம், படிப்பு, நண்பர்கள், உறவினர்கள் போன்றவை முறையே உங்கள் முன்னுரிமை பட்டியலாக வைக்க வேண்டும். Establish your Priority.(God, Physical, Family, Church, Ministry, Studies, Friends & Relatives).
3. தீர்மானங்களை வாஞ்சையாய் அனுதினமும் தொடர வேண்டும்.
   Purpose your passion (not every opportunity is a blessing from God)
4. நேரத்தை குறித்து எடுக்கப்பட்ட முடிவுகளை பாதுகாக்க வேண்டும்.
   Protect your plan and Priority.
5. நேர முதலீடுகளை அவ்வப்போது தற்பரிசோதனை செய்ய வேண்டும்.
   Identify what your value.
6. நேர முதலீடுகள் தவறுகிறபோது உறுதியான தீர்மானம் எடுத்து சரி செய்ய வேண்டும்.
   Take decision.
7. கடந்த கால தோல்விகளை மறந்து இலக்கை நோக்கி தொடர்ந்து முன்னேற வேண்டும்.
   Review your investment.
8. நமது ஐக்கியம் (ஈடுபாடு) எவைகளில் உள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும்.
   Inventory your association.

இதன் தொடர்ச்சி 36-ம் பக்கம் பார்க்கவும்

## சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

**பாஸ்டர். பெவிஸ்டன்**
பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan



ஹாய் குட்டீஸ், உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த வருடத்தின் இறுதி நாட்களில் வந்துள்ளோம். தேவனுடைய கிருபை நம்மை இதுவரைக்கும் அற்புதமாக தாங்கியுள்ளது. மனம் நிறைந்து தேவனுக்கு நன்றி கூறுவோமாக.

டிசம்பர் மாதம் என்றாலே நம் நினைவுக்குள் வருவது கிறிஸ்துமஸ் தான் அப்படித்தானே.. கிறிஸ்துமஸ் கேரல், கிறிஸ்துமஸ் தாத்தா, கிறிஸ்துமஸ் டிரஸ், ஸ்டார், ட்ரீ, பட்டாசு, பலகாரங்கள், அலங்காரங்கள்... வாவ் நினைத்தாலே சந்தோஷமாயிருக்குதுல்ல. ஆமா, இந்த சந்தோஷமான நாட்களில் நம்மை போன்ற பிற சிறுவர்களையும் சந்தோஷப்படுத்த நம்மாலான சிறு சிறு முயற்சிகளை எடுக்க பிரயாசப்படுவோம். அதை விளக்கும் வண்ணம் நடந்த உண்மை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

18-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் இருந்த சபாத் பள்ளிக்கூடத்தை சேர்ந்த சிறு குழந்தைகள், வெளி தேசங்களில் மிஷனெரிகளாக பணியாற்றும் ஊழியர்களுக்கு தங்களால் இயன்ற அளவு உதவி செய்தனர். இந்த சபாத் பள்ளிக்கூடம் ஜேம்ஸ் ஒயிட் என்பவரால் 1852-ம் வருடம் ஒரு கிறிஸ்தவ அமைப்பினரால் துவங்கப்பட்டது. இந்த பள்ளிக்கூடத்தில் வாரத்திற்கு ஒருமுறை உலகளாவிய மிஷனரிகளின் சாட்சிகளையும் அவர்களது ஊழிய தேவைகளையும் அறிவிப்பதும், அவர்களுக்காக ஜெபிப்பதும் வழக்கம். இப்படியாக ஒரு நாள் மிஷனெரி ஹட்சிங்ஸ் (HUTCHINGS) என்பவர் பற்றி சிறுவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

1853-ம் வருடம் சிலோன் தேசத்திற்கு மிஷனரியாக சென்று பின்னாட்களில் இந்தியாவில் மிஷனரி ஊழியம் செய்த ஹட்சிங்ஸ் என்பவரைக் குறித்து விளக்கும்போது சிறுவர்கள் கண்ணீர் மல்க ஜெபித்தனர். மேலும் ஜெபித்தால் மட்டும் போதாது. தன் சொந்த தேசத்தை விட்டு ஆபத்தான சூழ்நிலையில் மிஷனெரி பணியாற்றும் இவருக்கு தங்களால் இயன்றதை கொடுக்க வேண்டும் என விரும்பினர்.

சிறுவர்களால் மிஷனெரி ஊழியத்தை தாங்க முடியுமா? ஆசிரியர்கள் அதிர்ந்து போனார்கள். சிறுவர்கள் தங்களுக்கு கிடைக்கும் சிறு தொகையை சேமித்து அந்த பணத்தை மிஷனரிக்கு அனுப்ப தொடங்கினார்கள்.

அதில் குறிப்பிட்ட ஏழு சிறுவர்கள், தாங்கள் எப்படி மிஷனரிகளுக்கு உதவுகின்றோம் என்பதை கடிதம் வாயிலாக எழுதி, இந்தியாவில் மிஷனரியாக பணியாற்றிய ஹட்சிங்ஸ் அவர்களுக்கு அனுப்பினர்.

**முதலாம் சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, நீங்கள் சிலோனுக்கும் இந்தியாவுக்கும் சென்று, கிறிஸ்துவை அறியாத பாமர மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கிறீர்கள் என்பதை கேட்டு மகிழ்கின்றேன். ஒரு வாரத்தில் ஆறு செண்டுகளை என்னால் அனுப்ப முடியும். எப்படியெனில் நான் டீ, பால், காபி போன்றவற்றை குடிப்பதை தவிர்த்து,

அதினால் சேமிக்கப்படும் பணத்தை உங்கள் மிஷனரி ஊழியத்திற்கு அனுப்புகிறேன்.

**இரண்டாவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, மிஷனரி பணி என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். சிறு சிறு பைகளை தைத்து அதை விற்பதால் எனக்கு சிறிதளவு பணம் கிடைக்கின்றது. எனது தூக்கத்தையும், விளையாட்டுகளையும் கொஞ்சம் தியாகம் செய்து, அநேக பைகளை தைத்து அதிலிருந்து வரும் பணத்தை உங்கள் மிஷனெரி ஊழியத்திற்கு அனுப்பி தருகிறேன்.

**மூன்றாவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, நானும் எனது நண்பர்களும் வீட்டில் சிறிய தோட்டம் அமைத்து, அங்கு விளையும் காய் கறிகளை விற்று பணத்தை சேமிகின்றோம். அந்த பணத்தை முழுவதும் உங்கள் மிஷனரி பணிக்காக கொடுக்கின்றோம். எங்களால் முடிந்தவரை உழைத்து, அதிலிருந்து வரும் பணத்தில் மிஷனரிகளை தாங்குகிறோம்.

**நான்காவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, அநேக குழந்தைகள் இயேசுவைப் பற்றி தெரியாமலும், பரிசுத்த வேதாகமம் இல்லாமலும் இருகின்றார்களே.. அவர்களுக்கு வேதாகமம் சென்றடைய நாங்கள் எங்கள் பணத்தை சேமித்து அனுப்புகிறோம்.

**ஐந்தாவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, மிஷனெரி ஊழியத்திற்கு பணத்தை அனுப்புவது எனது கடமையும் இன்றியமையாததுமாகும். என்னால் சேமிக்கக்கூடிய ஒரு சென்ட் பணத்தையும் கூட சேமித்து அதை நான் மிஷனரி ஊழியத்திற்காக அனுப்பி வருகிறேன்.

**ஆறாவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, எனக்கு சாக்லேட் மிகவும் பிடிக்கும். ஆனால் இன்று முதல் எனது சாக்லேட் வாங்கும் பழக்கத்தை நிறுத்தி, அதினால் சேமிக்கப்படும் பணத்தை உங்கள் மிஷனரி ஊழியத்திற்கு அனுப்பி வைக்கிறேன். இன்னும் என்னால் இயன்ற அளவு சேமித்து அனுப்புவேன்.

**ஏழாவது சிறுவனின் கடிதம்**

திரு.ஹட்சிங்ஸ் அவர்களே, நான் இந்தியா வந்து அங்குள்ள மக்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்து, அவர்களை பரலோகத்திற்கு நேராய் நடத்தவேண்டும். இல்லையென்றால் அவ்வாறு ஊழியம் செய்யும் உங்களைப்போன்ற மிஷனரிகளுக்கு உதவி செய்து, அவர்கள் பரலோகம் செல்வதற்கு நானும் ஒரு வகையில் உதவ வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் மேலோங்கியுள்ளது. எனவே என்னால் முடிந்த அளவு பணத்தை சேர்த்து அனுப்பி வைக்கிறேன்.

மேலே எழுதப்பட்டிருக்கும் கடிதகள் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களால் எழுதப்பட்டுள்ளது என்பது நமக்கு வியப்பளிக்கிறதல்லவா? இந்த சிறுவர்கள் பலவிதமான விருப்பங்களை தியாகம் செய்தும், வேலைகளை செய்தும், தங்களுடைய பழக்க வழக்கங்களை வெறுத்தும் பணத்தை சேர்த்து மிஷனெரிகளை தாங்கினார்கள் என்பதை இந்த கடிதங்களிலிருந்து நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

அன்பு தம்பி தங்காய், இந்த பண்டிகை காலங்களில் உங்களாலும் ஊழியங்களை தாங்க முடியுமே! இரு ஆடை வாங்க விருப்பம் இருந்தால் அதில் ஒன்றை மிஷனெரிகள் குழந்தைகளுக்காக கொடுக்கலாமே, வீண் அலங்காரங்களையும், சாம்பலாகும் பட்டாசுகளையும் தவிர்த்து உதவி செய்யலாமே. அதை தான் கீழ்கண்ட வேத வசனங்கள் நமக்கு உணர்த்துகிறது.

தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் (உபாகமம் 15:11).

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 25:40).

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரிந்தியர் 9:7).

நாமும் இயன்ற அளவு மிஷனெரி ஊழியங்களை, நமது ஜெபத்தாலும், தியாக காணிக்கைகளாலும் தாங்க வேண்டும் என்பதையே அந்த சிறுவர்களின் கடிதங்கள் நமக்கு தெரிவிக்கின்றது

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். உங்கள் யாவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் ஆசீர்வாதமான புத்தாண்டு வாழ்த்துக்கள்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

## ஊழியம் செய்ய அர்ப்பணித்தவர்களுக்கான சிறப்பு கூடுகை

மதுரை கிழக்கு மண்டலத்திலுள்ள கிறிஸ்துவுக்கு மாணவர் SFC மற்றும் கிறிஸ்துவின் ஸ்தானிகர் (CA) ஆகிய இரு துறைகள் சார்பில் மண்டல முகாம்களில் முழு நேர ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்தவர்களை பட்டியலிட்டு, அவர்களுக்குக்கான பிரத்தியேக நடைமுறை ஆலோசனை கூடுகை 21.102023 அன்று அனுப்பானடி-கலங்கரை விளக்கம் AG சபையில் நடைபெற்றது.

முழுநேர ஊழிய அழைப்பை இனம் கண்டுகொள்வது, அழைப்பை உறுதி செய்தபின் செய்ய வேண்டியவை. நடைமுறை சோதனைகளில் ஜெயிக்க ஆலோசனைகள், முழு நேர ஊழியத்திற்கு பாத்திரவான்களாக மாறுதல் போன்ற பல தலைப்புகளில் மண்டல தலைமைப்போதகர் Rev.ஜான் வின்ஸிலி, Rev.பெவிஸ்டன் (கருப்பாயூரணி) மற்றும் Pas. ஜோசாயா பெசலீல் (மேலூர்) ஆகியோர் பயிற்சியளித்தனர். பின்னர் கேள்வி பதிலுக்கான நேரமும் ஒதுக்கப்பட்டது. இறுதியாக மண்டல தலைமைப்போதகரின் ஜெபித்துடனும், அறுசுவை உணவுடனும் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. இக்கூடுகையில் மண்டலத்திலுள்ள 7 சபைகளிலிருந்து 22 பேர் பங்கு பெற்றனர். பங்குபெற்ற அனைவரும் புத்துணர்ச்சியுடன் பயனடைந்தனர். தேவனுக்கே மகிமை

மதுரை கிழக்கு மண்டலம்

---



# பிள்ளை வளர்ப்பு

**Rev. பெகின் சாமுவேல்**
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பரிபூரண ஜீவன் இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.. இந்த மாதம் நடைபெற இருக்கிற Bible Champions தேர்வில் உங்கள் பிள்ளைகள் கலந்துகொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துங்கள். தொடர்ந்து AGCM ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த இதழிலும் பிள்ளைகளை எவ்வாறு வேதத்தின் சத்தியத்திற்குள் வளர்ப்பது என்று பார்ப்போம்.

சிறுபிராயத்திலேயே பிள்ளைகள் சரியான ஒழுங்கிற்குள்ளாக வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், அவர்கள் தவறான காரியங்களை கற்றுக்கொள்வார்கள். ஒரு தவறான செயல் இன்னொரு தவறான செயலுக்கு வழிவகுக்கும். சிறு பிராயத்தில் கேட்கப்படுபவைகளும், பார்க்கப்படுபவைகளும் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இயேசுவானவர் தன்னுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு பருவத்திலும் பரிபூரணராகவே காணப்பட்டார்.

**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார் (லூக்கா 2 : 52).**

இந்த இதழிலும் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு என்ன என்பதை தியானிப்போம்.

### 1. விசுவாசத்தில் வளர்த்த தீமோத்தேயுவின் தாய், பாட்டி

தீமோத்தேயு தன்னுடைய அம்மா மற்றும் பாட்டியால் விசுவாசத்தில் வளர்க்கப்பட்டான். அந்த விசுவாசம் அவர்களுக்குள் இருந்து தீமோத்தேயு வினிடத்தில் வந்தது. அதைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவை மெச்சிக்கொள்கிறார். **அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்கும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்** (2 தீமோ 1: : 5).

### 2. அர்ப்பணிப்பில் வளர்த்த ஆபிரகாம்

ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை மோரியா மலையில் பலியிடச் சென்றதிலிருந்து அர்ப்பணிப்பில் வளர்த்தான். தானும் தேவனுக்காய் அர்ப்பணிப்போடு வாழ்ந்தான். ஈசாக்கு தியாகத்துடன் தேவப்பிள்ளையாய் வளர்க்கப்பட்டதினால் அவனுடைய வாழ்நாள் முழுவதும் அதே அர்ப்பணிப்போடு வாழ்ந்தான்.

### 3. தேவனுக்காக வளர்த்த மோசேயின் தாய்

மோசேயை நதியில் கண்டெடுத்த பார்வோனின் குமாரத்தி அவனை தனக்காக வளர்த்திடு என்று மோசேயின் தாயினிடத்தில் சொன்னபோது, அவள் அவனை தேவனுக்காக வளர்த்திட்டாள். அவன் தேவ பயத்துடன் வளர்க்கப்பட்டான். விளைவு, பின்னாட்களில் கர்த்தர் அவனை பல லட்ச இஸ்ரவேலரை இரட்சிக்கும் இரட்சகனாக மாற்றினார். '**பார்வோனுடைய குமாரத்தி அவளை நோக்கி நீ இந்தப்**

**பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்காக வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன் என்றாள். அந்த ஸ்திரீ பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை வளர்த்தாள்** (யாத். 2: 9).

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் சரீர தேவைகளை மட்டும் கவனித்தால் அவர்கள் கடமை முடிந்ததாக கருதுகின்றனர். அப்படியல்ல. அவர்களை நீங்கள் எப்படி சத்தியத்தில் வளர்க்கிறீர்கள் என்பது மிக முக்கியம். அவர்கள் குறைகளை திருத்துங்கள். நல்ல பண்புகளை ஊக்கப்படுத்துங்கள். விரும்பத்தகாத சுபாவங்களை உங்கள் பிள்ளைகள் பெற்றிருந்தால் மனம் சோராதீர்கள்.அன்பான வார்த்தைகளாலும், செயல்களாலும் அவர்களை பெலப்படுத்துங்கள். ஏனெனில், சிறு வயதில் எவைகளை கற்றுக்கொள்கிறார்களோ அது அவர்கள் வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கும். அவர்களுடைய இருதயத்தில் கற்றுக்கொண்டவைகள் ஆழமாக பதிந்து விடும். அவைகளை விடுவது அவ்வளவு சுலபமானதாக இருக்காது.. எனவே, பிள்ளை வளர்ப்பில் பெற்றோர்கள் அஜாக்கிரதையாக இராமல் மிகுந்த ஜெபத்துடன் பிள்ளைகளை வளர்ப்போமாக.

---

## தேவனுடைய வார்த்தை எப்படிப்பட்டது?

1. தேவனுடைய வார்த்தை - **ஆதியிலே** இருந்தது (யோவான் 1:1).
2. தேவனுடைய வார்த்தையால் **உலகங்கள்** உண்டானது (எபிரெயர் 11:3).
3. தேவனுடைய வார்த்தையினால் **மனுஷன்** பிழைப்பான் (உபா.8:3; மத்.4:4)
4. தேவனுடைய வார்த்தையினால் **போதனை** உண்டாகும் (உபா.33:3).
5. தேவனுடைய வார்த்தையினால் **சுகம்** உண்டாகும் (மத்.8:8).
6. தேவனுடைய வார்த்தை **மெய்**யானது (1 நாளா.6:17).
7. தேவனுடைய வார்த்தை **ஜீவன்** உள்ளது (எபி.4:12).
8. தேவனுடைய வார்த்தை **வல்லமை** உள்ளது (எபி.4:12).
9. தேவனுடைய வார்த்தை **இருபுறமும்** கருக்குள்ள பட்டயம் (எபி.24:12).
10. தேவனுடைய வார்த்தை ஆத்துமாவை **உயிர்ப்பிக்கிறது** (சங்கீதம் 19:7).

சகோதரி N.மாரித்தங்கம், ஏலிம் ஏ.ஜி.சபை. கூடல்நகர்

---

**31-ம் பக்க தொடர்ச்சி**

9. **இல்லை என்று சொல்லி பழக வேண்டும், எல்லாவற்றையும் எல்லோரையும் பிரியப்படுத்த முயற்சிக்கக் கூடாது.**
   Don't try to please everyone and everything say no.
10. **கடந்ததை மறந்து, இலக்கை நோக்கி தொடர வேண்டும்.**
   Forgot the past and future.

A POEM

Take Time to Think - it is the source of power.
Take Time to Read - it is the foundation of wisdom.
Take Time to Play - it is the secret of staying young.
Take Time to be Quiet - it is the opportunity to seek God.
Take Time to Be Aware - it is the opportunity to help others.
Take Time to Love and Be Loved - it is God's greatest gift.
Take Time to Laugh - it is the music of the soul.
Take Time to be Friendly - it is the road to happiness.
Take Time to Dream - it is what the future is made of.
Take Time to Pray - it is the greatest power on Earth.

*Author unknown*

## எல்லாம் இயேசு

**பல துறையில் உள்ள கலைஞர்கள் இயேசுவை கீழ்கண்டவாறு வர்ணிக்கிறார்கள்**

- வானசாஸ்திரம் இவரை... விடிவெள்ளி நட்சத்திரம் என அழைக்கிறது (வெளி.22:16)
- சமையல்கலை வல்லுநருக்கு இவர்.... ஜீவ அப்பம் (யோவான் 6:18)
- தச்சர் சொல்கிறார்... இவரே வாசல் (யோவான் 10:7)
- கட்டிட தொழிலாளி... இவரே மூலைக்கு தலைக்கல் என்று அழைக்கின்றார் (1 பேதுரு 2:6)
- சபை இவரை... சபையின் தலை என்கிறது (எபே.5:23).
- மின் பொறியாளர் இவரை... உலகின் ஒளி என்கிறார் (யோவான் 8:12).
- காட்டிலாக்கா இவரை... ஜீவ விருட்சம் என்கிறது (வெளி.22:14).
- புவி ஆராய்ச்சி இவரை... கன்மலை என்கிறார் (1 கொரி.10:4).
- அரசாங்கம் இவரை... ஆளுநர் என்கிறது (லூக்கா 23:47).
- பத்திரிக்கை துறை இவரை... இவரே சத்தியம் என்றது (யோவான் 17:6).
- வக்கீல் இவரை... மத்தியஸ்தர் என்கின்றனர் (1 தீமோ.2:5).
- நாட்டாமை இவரை... ஆலோசனைக் கர்த்தர் என்கின்றனர் (ஏசாயா 9:6).
- கால்நடைதுறை இவரை... பிரதான மேய்ப்பன் என்கிறது (1 பேதுரு 5:4).
- மருத்துவதுறை இவரை... இவரே பரிகாரி என்கிறது (யாத்.15:26).
- சமுத்திர ஆராய்ச்சியாளர் இவரை... ஜீவதண்ணிருள்ள நதி என்கின்றனர் (வெளி.22:1).
- புகைப்படக்காரர் இவரை... தேவனின் சாயல் என்கின்றனர் (1 கொரி.4:4).
- கைதிகள் இவரை... விடுவிக்கிறவர் என்கின்றனர் (ரோமர் 11:26).
- விரிவுரையாளர்கள் இவரை... தேவனுடைய ஞானம் என்கின்றனர் (1 கொரி.1:24).
- பாவிகள் இவரை... பாவிகளின் சிநேகிதன் என்கின்றனர் (மத்.11:19)
- போர்வீரர்கள் இவரை... சமாதான பிரபு என்கின்றனர் (ஏசாயா 9:6)
- கல்வியாளர் இவரை... ஆசானே என்கின்றனர் (யோவான் 13:13).
- வேத வல்லுநர் இவரை... அபிஷேகிக்கிறவர் என்கின்றனர் (யோவான் 1:13).
- போக்குவரத்து துறையினர் இவரை... இவரே வழி என்கின்றனர் (யோவான் 14:6)
- விலங்கியல் துறை இவரை... யூதாவின் சிங்கம் (என்கின்றனர் (வெளி.5:5).
- கப்பல் பணியாளர் இவரை... இரட்சிப்பின் அதிபதி என்கின்றனர் (எபி.2:10).

அவரின் பிறப்பை கொண்டாடும் நமக்கு... இவர் யார்?

"கர்த்தராகிய கிறிஸ்து என்னும்
இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11)

இந்த அன்பின் இரட்சகரை பட்டணம் முழுவதும் பறைசாற்றுவோம்!

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -1 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | யாக்கோபு | (25:27) |
| 2. | நிம்ரோத் | (10:9) |
| 3. | சாராள் | (23:2) |
| 4. | நோவா | (9:29) |
| 5. | ஆகார் | (16:1) |
| 6. | இஸ்மவேல் | (25:17) |
| 7. | எலியேசர் | (15:2) |
| 8. | ரெபேக்காள் | (24:16) |
| 9. | அபிமேலேக்கு | (20:2) |
| 10. | நாகோர் | (11:24) |
| 11. | காயீன் | (4:16) |
| 12. | ஏசா | (25:27) |
| 13. | லாபான் | (24:29) |
| 14. | சாராய் | (12:11) |
| 15. | ஆதாம் | (4:25) |
| 16. | ஈசாக்கு | (25:20) |
| 17. | ஏனோக்கு | (5:23) |
| 18. | ஆபிரகாம் | (17:24) |
| 19. | லோத்து | (19:1) |
| 20. | எப்பெரோன் | (23:8) |
| 21. | பெத்துவேல் | (24:24) |
| 22. | மெத்தூசலா | (5:27) |
| 23. | மெல்கிசேதேக்கு | (14:18) |
| 24. | திதியால் | (14:1) |
| 25. | ஆபேல் | (4:2) |

---

## போட்டி எண் : 1 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**:பிரேமலதா; T.சாந்தி; கனகவல்லி; தங்கமணி; கிரிஜா; தாவூது @ Sமாரிமுத்து; லின்சி; மகேஷ்வரி; பூங்கோதை ; கோகிலா; L.குளோரி; சித்ரா பிளஸ்சி; V. பியூலா; எஸ்தர் (அச்.பு); J.சுமதி; பிரியா; மயில்ராஜ்; ராதாமணி; G.முத்துலெஷ்மி; இந்திராகுமார்; J.கிரிஜா; சுமதி; டோரா; மரகதம்; மஞ்சு; மாது; எஸ்தர் கலா; புஷ்பவல்லி; T.கலா; விஜிராஜா; E.கலா; ராணி பிளஸ்ஸிங்; மாலா;|**மதுரை** :M.மணிமேகலை; திவ்யபிரியா; கலைச்செல்வி; கலாவதி; ஜெயா; தங்கமணி; சாந்தி பால்ராஜ்; மேரி நற்குணம்; ராஜி; வசந்த குமாரி;|**ஆறுமுகநேரி**: ஜாய்ஸ் மேரி; வெண்ணிலா எஸ்தர்; இமான்ஷி பிரியா; சுஷ்மிதா; ஏஞ்சல்; கிரேஸி; பிரெய்ஸி; கிருபா; இருதய ஸ்டெர்லின்; செல்வ பிரியா; நிவேதா; ரோஸ் பிளஸ்சி; நிசி சாம்; பிரேமா கணேசன்;| **திருநின்றவூர்** : வின்சி; அனிதா; மாலதி; மார்த்தாள்; ஏஞ்சலின் ஜெனிஸ்; சகுந்தலா பாண்டியன்; லாவண்யா; மினி வசந்தம்; சரண்யா; ரூத்; அனுலா; லீலா பரணி; ஹெல்வினா ரென்ஸி;| **நெல்வாய்**: அருணா; தேன்மொழி; கலையரசி; மொர்சி; கற்பகம்; கிருபாவதி; அனிதா; நர்மதா; மலர்விழி; ஆர்த்தி; பொக்கிஷராணி; மேத்யூ தருண்; அமலா;| **எடப்பாடி** : சுதா அரசு; ரெஜினா புகழ்; புஷ்பா; பிருந்தா; அஞ்சலி; எப்சிபாள்; செல்வி ராஜ்; மாலதி சுரேஷ்; ரித்திஸ்; தீபனா; விஜயா; எமீமாள்; பிளஸ்ஸி; போவாஸ்; ஜோசப் மேரி;| **இறச்சகுளம்** : சகாய சஜி ஜெனிபர்; கலா; ராதிகா; காயத்ரி; மகிழ் ஜெயந்தி; ஜீவிலின்;| **சென்னை** : அமுதவல்லி; ரேகா அற்புதராஜ்; | **சேத்துப்பட்டு**: ஜெபா ஹெலன்; அமல செல்வி; லட்சுமி காந்தா; ரெக்ஸி ஈஸ்வரன்; சுமதி;|**TPCசெனாய் நகர்**: S.ராணி; **உள்ளகரம்** : மொர்லின் ஹெலன்; **ஆவடி** : சந்திரா சாலொமன்ராஜ்; எழிலரசி;|**கொட்டிவாக்கம்** : அஞ்சலி; எஸ்தர் விஜயராணி; எப்சிபா; அகஸ்டினா மதினா; |**கிராப்பட்டி** : புளோரா அருணா; |**குரோம்பேட்**: T.ரெபெக்காள்; கோமதிகுமார்; தாமரைச்செல்வி;|**சூளைமேடு**: S.பூங்கனி; M.அருள்மேரி; **முகப்பேர்**: கிளாடிஸ்; |**அரும்பாக்கம்**: மேரி; |**மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; |**வளசரவாக்கம்** : நிர்மலா எஸ்தர்; புவனேஸ்வரி; அமுதா ஆஷா; ஜெபசெல்வி தனராஜ்; பிரின்சி டோனட்ஸ்;| **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; |**காமராஜபுரம்**: மரகதலீலா; |**அச்சிறுபாக்கம்**: சுதா சார்லின்; நான்சி; சிலம்பரசன்; சமாதானம்; பிளஸ்ஸி; ரேஷ்மா; தமிழ்ச்செல்வி; J.ஜென்ஸி; |

## போட்டி எண் : 1 (சரியான விடை எழுதியவர்கள்)...

**நிலக்கோட்டை** : Rm.மீனாள்; |**கடையநல்லூர்** : ஆஷாதேவி; தங்கராஜ்; சாமுவேல்; விக்டோரியா; ஸ்டெல்லா ; வினோலியா; செல்வி இந்திராணி; |**கள்ளக்குறிச்சி**: வசந்தி இராஜகுமாரி; மஞ்சுளா; தேவி; தங்கம் சாக்கோ; ரூத்|**ஸ்ரீ வில்லிபுத்தூர்**: நெல்சன் செல்வராஜ்; வசந்தா; எஸ்தர் இந்திரா; காபிரியேல்; பாஞ்சாலி; மெஸி; |**உடுமலைப்பேட்டை**: கேபிரியேல்; சூசன்னாள்; புஷ்பா மேரி; சுகந்தி; வசந்தி சாமிநாதன்; |**திருநெல்வேலி**: L.தெரசா; மவுன்ட்மரி; ஜெபகுட்டி மோசஸ்; மல்லிகா; செல்வபிரியா; | **அகரம் தென்**: ஜாய் கிளாடிஸ்; |**ஒட்டப்பிடாரம்**: ஞானவடிவு; டெய்சி யோகராஜ்; சரஸ்வதி; பேச்சியம்மாள்; இருதயராஜ்; |**ஆலங்குளம்** : (வி): ஸ்டெல்லா; ரெஜினா சாரு; மரியாள்; R.V.பிளாரன்ஸ்; |**வீரபாண்டிய பட்டிணம்** : சுகிர்தா டைட்டஸ்; அலீஸ்; |**பழனி**: பிரீத்தி; மாரியம்மாள்; K.சாந்தி; |**ஆம்பூர்** : ரூபி மனோ; கிரிஜா சந்தியா; |**பெருந்துறை**: P.எப்சிபா; |**திருவள்ளூர்**: ஆனந்தகுமார்;| **தஞ்சாவூர்**: M.தேவகுமார்; |**ஓசூர்**: ஜெமிந்தா; பரிமளா; விஜயா; ஐடா;|**கிருஷ்ணகிரி**: தீமோத்தேயு; ரேச்சல் அனுசுயா; எஸ்தர் செல்வி|**ஆண்டிபட்டி**: தேவபாக்கியம்; தபித்தாள்; புளோரியா; |**நாவலூர்** : தங்கமணி; |**சாத்தூர்** : சரோஜா; | **கிச்சிப்பாளையம்**: விஜய்; | **கோத்தனூர்**: தேவபிரியா; |**மூலைக்கரைப்பட்டி**: எஸ்தர் கோமதி;|**கூடங்குளம்**: சுரேஷ்; கார்த்திகா; செல்வி; சோனியா; |**நாகலாபுரம்**: ஷைனி; சாராள்; லில்லி ஜெனட் தங்கம்; |**K.T.C.நகர்**: பிரேமா ரூத்; ஷில்வியா; |**தென்னம்பாளையம்**: ரோஸ்லின் சாந்தி; |**ஆத்தூர்**: G.லில்லி; தேவி; பிரேமா மதிவானன்;|**தேனி**: செண்பக புஷ்பா ஜேம்ஸ்; தனம்; திரவியச்செல்வி; கிருபா;|**நாகமலை**: விஜிலா; ஹில்டா எலிசபெத்; ஆனந்தி; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா;| **திருச்சி**: சாந்தி; பிரின்ஸி ஷியாம்; ஜஸ்டஸ் டேனியல்;**S.**சோனி; |**திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**இடைகால்**: செல்வி ஜான்சன்; |**இளையரசனேந்தல்**: ஜெஸி;D.ஜோன்; |**நாங்குநேரி**: லாரன்ஸ் சேவியர்;|**களக்காடு**: விமலா மேரி; ரெக்ஸின்;| **பள்ளிக்கரனை**: M.ஜோதி; **நாசரேத்**: மெர்சி; G.எஸ்தர்; |**வேப்பம்பட்டு**: ஜோஸ்மேரி கிரேசன்; **திண்டுக்கல்**: லதா|**ஈரோடு**: ஜெப்ரின் இம்மானுவேல்; N.V.ஹேமலதா;|**நத்தக்காடையூர்**: எஸ்தர்; ஏசையன்; |**கல்லல்**: தேவநேசம்; அபிஷாக்; |**கீழ்வேளூர்**: கிரேனாப்பு;|**தூத்துக்குடி**:J.லில்லி; புருசிமா;|**போர்ட் பிளேர்**: ஜெயந்தி; தங்கராஜ்; |**ஏர்வாடி**: மரகதம்; |**நாகர்கோவில்**: ஏஞ்சல் குமார்; |**K.P.வலசை**: ஷீலி; |**வடக்கு ஆத்தூர்**: மகேஷ்வரி|**சுரண்டை**: குளோரி ஞானம்; |**பட்டாபிராம்**: பிரியா; ஜீவா பிரீடா; |**பரமத்தி வேலூர்**: தீபக் பால்சிங்; பியூலா; | **புளியங்குடி**: ஜெயமணி; சுந்தரி; |**குற்றாலம்**: வேளாங்கன்னி; ரூத் செல்வராஜ்; | **கோயம்புத்தூர்**: கிறிஸ்டினா அபிகாயில்; |**இராமன் புதூர்**: லீதியாள்; பசுவந்தனை: கிருபா ஜெப்ரி; |**சின்னாளப்பட்டி**: சலோமி; |**மதுராந்தகம்**: கிரேஸ் பியூலா; |**புதுக்கோட்டை**: லலிதா;| **வத்ராப்**: ஜெபராணி; |**முத்தையாபுரம்**: அன்னாள் மேரி; |**தும்பைப்பட்டி** : கற்பகவள்ளி; | **ஆழ்வார் திருநகரி**: ஜோதி ராணி; |**கல்லுக்குறி**:W.டால்டன்; |**இராயப்பேட்டை**: ஞானம்மாள்; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**நாகப்பட்டினம்**: வசந்த கோகிலம்; |**வில்லியனூர்**: L.புரோனிக்கா |**ஆழ்வார்-குறிச்சி**: ஹரி லீலா; |**கலுங்கடி**: சத்யா; |**திசையன் விளை**: செல்வபாக்கியம் |**கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**பாவூர்சத்திரம்**: ஜெசிலி; |**உக்கிரன்கோட்டை**: ருக்குமணி ஜெயராஜ்; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; |**ரெட்டியார் பட்டி**: தங்கம்மா; | **டக்கரம்மாள்புரம்**: மரிய பெலிசிட்டா; |**கம்பம்**: ஜோதிமணி; **வடக்கன்குளம்**: வீனஸ் குமார்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -2
## (ஆதியாகமம் 26-50 அதிகாரங்கள்)
## பொருத்துக (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. தேவனுடைய சேனை - செபுலோன்
2. கல்தூண்- பாரேஸ்
3. வாக்குவாதம் - எப்பிராயீம்
4. மீறுதல் உன்மேல் நிற்கும் - தாண்
5. கோபுரம் - மக்னாயீம்
6. பீறுகிற ஓநாய் - போத்திபிரா
7. கல் குவியல் - சுக்கோத்
8. எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறவர்கள்-ஆபேல் மிஸ்ராயீம்
9. தேவனே சாட்சி - ஏசா
10. நல்ல ஈவு - ஏசேக்கு
11. உயிர் தப்பி பிழைத்தேன் - தெபொராள்
12. விரியன் - பென்யமீன்
13. ரோமம் மிகுந்தவன் - பெத்தேல்
14. பலிபீடம் - சேரா
15. தேவன் என்னை பலுகப்பண்ணினார் - பெனியேல்
16. பெரிய துக்கம் கொண்டாடல் - யூதா
17. கோவேறு கழுதை - ஏல் எல்லோகே இஸ்ரவேல்
18. ஓன் பட்டணம் - யோசேப்பு
19. இருபது வெள்ளிக்காசு - ஏதேர்
20. தகப்பனுக்கு உத்தரவாதி - மேய்ப்பர்கள்
21. நல்ல நாடு - சீகேம்
22. கொட்டாரங்கள் - ஆனாகு
23. தேசத்தின் பிரபு - கலயெத்
24. அல்லோன் பாகூத் - ராமசேஸ்
25. சிவப்பு நூல் - மிஸ்பா

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.12.2023



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## திருச்சி தெற்கு மற்றும் மத்திய மண்டல பெண்கள் முகாம்








## கோவை சிட்டி ஏ.ஜி. சபை ஆலய பிரதிஷ்டை










## சுங்குவார்சத்திரம் ஏ.ஜி. சபை அடிக்கல் நாட்டு விழா





Registered News Paper Regd. No. 8206 / 62







BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664